Registered at the G. P. O. as a News paper

விலை சதம் 15

வாரப்பதிப்பு

# ஈழநாடு

EELA NADU National Tamil Daily — தேசிய தினசரி

போன் — தபாற் பெட்டி எண 49

மலர் 5 | யாழ்ப்பாணம், | சுபகிருது | பங்குனி 25 ஆம் நாள் | துல்ஹஜ் பிறை 12 | (7-4-63) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 58

போன்: 296 தந்தி: 'ரோகிணி'

**S. R. S.**

**ஜவுளி மாளிகையில்**

தமிழ் புதுவருஷத்துக்கான பட்டு நூல்
ஜவுளி வகைகள்
ஏராளமாக கைவசம் இருக்கின்றன.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

எஸ். ஆர். செல்லத்துரை,
216. கே. கே எஸ். ரோட், யாழ்ப்பாணம்

நாளை ஆரம்பமாகும்

# 'எல்லாம் தமிழியக்கம்' வலுப்படுத்தப்படும்

## தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை முடிவு

வவுனியா, ஞாயிறு

'எல்லாம் தமிழ் இயக்கத்தை' வலுப்படுத்துவதென நேற்று வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியக்கமிட்டி முடிவு செய்துள்ளது.

இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் பொருளாதார, மொழிப் பிரச்சனைகளுக்கு முடிவு காணுவதற்குச் சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதே தகுந்த வழி எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நம்பக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நேரடி நடவடிக்கை பற்றி, அதற்கான நேரடி நடவடிக்கைக் குழு ஆராய்ந்து நிலைமைக்கேற்றவாறு ஒழுங்குகள் செய்யும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வவுனியாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியசபை கூடியது. இக்கூட்டத்திற்கு வடமாகாணத்தைச் சேர்ந்த எம். பி.க்கள் அனைவரும் சமுகமளித்தனர். கிழக்கு மாகாணத்திலிருந்து திரு. எஸ். எம். இராசமாணிக்கமும், திரு. முகமதலியும் சமுகமளித்திருந்தார்கள். மட்டக்களப்பு எம். பி. திரு. சி. இராசதுரை கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

நேற்றைய கூட்டத்தில், நேரடி நடவடிக்கையின் முதற் கட்டமானதும் நாளை ஆரம்பிக்க விருப்பதுமான 'எல்லாம் தமிழியக்க'த்தை வலுப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்ப் பேசும் மக்கள் தாங்கள் அரசாங்கத்துடன் செய்யும்சகல தொடர்புகளையும், பிற தொடர்புகளையும் முற்றிலும் தமிழிலேயே செய்யக்கட்டாயப்படுத்தி இயக்கத்தை விரிவுபடுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நேரடி நடவடிக்கை என்ன விதத்தில், எந்த நேரத்தில், எவ்விடத்தில் எப்படிச் செய்யவேண்டும் என நேரடி நடவடிக்கைக் குழு காலத்துக்குக் காலம் மக்களுக்கு தெரியபபடுத்தும் எனவும் கூறப்படுகிறது.

பொதுக் காரியசபை இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

## புதிய செனட்டராக திரு. நடேசபிள்ளை நியமனம்

கொழும்பு, சனி

முன்னைநாள் தபால் ஒலிபரப்பு மந்திரி திரு. சு. நடேசபிள்ளை செனட்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் செனசபையிலிருந்து தமது பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட காலிஸ்தானத்துக்கு திரு. நடேசபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 9-ம் திகதி திரு. நடேசபிள்ளை செனட்டராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்த எம். பி. க்களுக்கு அவர் மேற்கண்ட நியமனம் பற்றித் தெரிவித்தார்.

## இரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணார்பண்ணை சிவன் கோயில் இரதோற்சவம் நேற்று நடைபெற்றது. பெருந்திரளான பக்தர்கள் வைத்தீஸ்வரப் பெருமானைத் தரிசித்துச்சென்றனர். ஆலயத்தின் நான்கு வீதிகளும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்ப்ட்டிருந்தன

## 'வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நீதிமன்ற மொழி தமிழ்'
### பிரதமர் கூட்டிய மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது

கொழும்பு, சனி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிபரிபாலனம் தமிழில் நடைபெறுதல் வேண்டுமென்ற கோரிக்கைபற்றி பிரதமருடன் சில தமிழ் எம்.பிக்கள் பேச்சுவார்த்தை நடத்தியபோது ஆலோசிக்கப்பட்டதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. வெள்ளிக்கிழமை மாலை அலரிமாளிகையில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அலரிமாளிகையில் பிரதமர் கூட்டிய தமிழ் எம். பிக்களின் இம்முக்கியமகாநாட்டில் யாழ்ப்பாணம்எம்.பி. அ. துரையப்பா பொத்துவில் எம். பி. ஜனாப் ஏ. எம். அப்துல் மஜீத், நிந்தாவூர் எம்.பி. ஜனாப் எம். ஐ எம். மஜீத், கல்முனை: எம். பி. ஜனாப் எம். சி. அஹமத், மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் ஆகிய ஐந்து எம். பி.க்களும் பெட்ரோலியக் கூட்டுத்தாபன உப தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியும் கலந்துகொண்டனர். பிரதமமந்திரியுடன் நீதிமந்திரி சாம் பி. சி. பெர்னாண்டோவும் இருந்ததாகத் தெரிகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட நிலைமைகளையிட்டு எம். பி.க்கள் பிரதமரிடம் விளக்கிக்

(12ம் பக்கம் பார்க்க)

## மகாநாட்டில் 'ஈழநாடு'

கொழும்பு, சனி

பிரதமருக்கும் சில தமிழ் எம். பி. க்களுக்குமிடையே நடைபெற்ற மகாநாட்டில் "ஈழநாடு" பற்றியும் குறிப்பிடப்பட்டதாக அறியப்படுகிறது.

மகாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் 'ஈழநாடு' மாத்திரம் முதல் பக்கத்தில் இதுபற்றிய செய்தியை வெளியிட்டிருந்ததாக, மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஒரு அங்கத்தவர் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இந்தச் சமயத்திலே இங்கு (கொழும்பு) வெளியாகும் ஆங்கில மாலைப் பத்திரிகைகள் கொண்டுவரப்பட்டு படிக்கப்பட்டன. ஆனால் அவைகளில் மகாநாடு பற்றிய செய்தியொன்றும் இடம் பெற்றிருக்கவில்லை. பின்னர், ஈழநாட்டில் வெளிவந்த செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து டெலிபோன் மூலம் அறிவிக்கப்பட்டது எனத் தெரிகிறது.

## அமெரிக்க-ரஷ்ய தொடர்பு

ஜெனிவா, ஏப். 6

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே அதிக தொடர்பை ஏற்படுத்துவதற்காக இரு நாடுகளிடையேயும் டெலிபோன் டெலிப்பிரிண்டர் சேவைகளை ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்த யோசனையை ரஷ்யா ஏற்றுக் கொண்டுள்ளது.

## இன்று

மாலை 3 மணிக்கு நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் வால்மீகி தினம் கொண்டாடப்படும்.

## சந்திர ஆகர்ஷண சக்தியுள் ரஷ்ய ராக்கெட்

மாஸ்கோ, ஏப்ரல் 6

ரஷ்யா சந்திர, மண்டலத்துக்கு அனுப்பிய லூனிக் 4 என்ற ராக்கெட் சந்திரனின் ஆகர்ஷண சக்திக்குள் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திர மண்டலம் பற்றிய படங்களை இனி இந்த ராக்கெட் படம் பிடிக்கும் என நம்பப்படுகிறது.

புளு மருந்து

BAYER



T'GRAMS ROYAEL

பொலிடோல்

FOLIDOL

Agents

ROYAL DISPENSARY

PHONE 397 JAFFNA

## வரி விளம்பரம்

**மாணவர் தேர்ச்சி அறிக்கை**

தடித்த காகிதத்தில் பாடசாலை விலாசமும் அச்சிட்டு 100 அறிக்கைக்கு ரூ. 10 வீதம் முற்பணத்துடன் ஓடர் அனுப்புக. இரு தினங்களில் அனுப்புவோம். கலாபவனம், பருத்தித்துறை. 827

**விற்பனைக்கு**

CL 7545 ஒஸ்டின் 2½ தொன் லொறி நல்ல நிலைமையில் விற்பனைக்குள்ளது. சி. சச்சிதானந்தம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 812.

**தேவை**

குளிர்பானங்கள் டெலிவரி செய்வதற்கு சொந்தத்தில் சைக்கிள் வைத்திருக்கும் வாலிபர்கள் தேவை. நாளொன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரை சம்பாதிக்கலாம். விபரங்களுக்கு: நம். 34, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 852

# புலவரக வெளியீட்டுநூல்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | தமிழ்ப் புலவர் சரித்திரம் | 5—00 |
| 2. | முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு | 1—50 |
| 3. | முத்துக்குமார கவிராயர் பிரபந்தத்திரட்டு | 1—00 |
| 4. | தோத்திர மஞ்சரி | 1—25 |
| 5. | முருகன் திருப்புகழ் மாலை | 1—00 |
| 6. | காசியாற்றுப்படை | —35 |
| 7. | மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை | —25 |
| 8. | சந்திரசேகரப்பிள்ளையர் இரட்டைமணிமாலை | —15 |
| 9. | மாவைப் பதிகம் மாவையிரட்டை மணிமாலை | —10 |

கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை,
புலவரகம், மயிலணி,
சுன்னாகம் P.O.

(புஸ்தகசாலைகளிலும் விலைக்குக் கிடைக்கும்)

834

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (7-4-63) முதல் பங்குனித் திங்கள் 31-ம் நாள் சனிக்கிழமை (13-4-63) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் வண்டிவாகனச் செலவு, காணித்தகராறு, குடும்பசுகம், புத்திரசுகம், மனச்சஞ்சலம், செலவு அதிகரிப்பு, தொழிலில் முன்னேற்றம், கமத்தொழில் மத்திமபலிதம், உத்தியோகத்தருக்கு நன்மைப்பேறுகள், மாணவருக்கு கல்விச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பநலன்கள், வர்த்தகருக்கு நன்மைப்பேறுகள் ஆதியன காணப்படுகின்றன.

★

### இடப இராசி

(கார்த்திகை, பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவவிராசியாளருக்கு இவ்வாரத்தில் பொருள்வரவு, களத்திரகஷ்டம், குடும்பசச்சரவு, தொழில்நலம், அதிகாரிகள் ஆதரவு, வண்டி வாகன நன்மை, வர்த்தகச் சிறப்பு, கமத்தொழில் நலம், ஊழியரால் கஷ்டம், மாணவர் கல்வித்தடை, பொருள்கஷ்டம், பெண்களுக்கு சுகம், தெய்வ வழிபாடு ஆதியன காணப்படுகின்றன.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம், பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பசுகம், களத்திரவழி உதவி, தாயாதிகளால் நன்மை, கமத்தொழில் மேன்மை, தொழிற்சிறப்பு, கடன்வரவு, வண்டிவாகன ஆதாயம், வர்த்தகச்சிறப்பு, தொழிலில்விஸ்தரிப்பு முயற்சி, மாணவர் கல்விச்சிறப்பு, பெரியோர் ஆதரவு, பெண்களுக்கு களத்திரபுத்திர சுகம், பிதுரு வழி உதவி, ஆதியன உண்டாம்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் பொருள்வரவு, தொழிற்சிறப்பு, உத்தியோகநலம், அதிகாரிகள் ஆதரவு, பண்டிவாகனச் சிறப்பு, மாணவர் கல்வித்தடை. சோம்பல்— உடல்நலக் குறைவு, களத்திர வழித் தகராறு, பெண்களுக்கு தெய்வவழிபாடு, ஆலயதரிசனம், வர்த்தகருக்கு நற்பலன் ஆதியன காணப்படுகின்றன.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மத்திமசுகம், பொருள் வரவும் அதற்கேற்ப செலவும் காணப்படல், உத்தியோகத்தருக்கு நன்மைகள், அதிகாரிகள் ஆதரவு, வண்டி வாகனசுகம், மாணவருக்குக் கல்வித்தடை, பெரியோர் பகை, வர்த்தகருக்கு மத்திம பலன்கள், முயற்சி விருத்தித்தடை, கமத்தொழில் மத்திம பலிதம், பெண்களுக்கு களத்திரவழிச் சிறப்பு, குடும்பசுகம், பணவரவு ஆதியன காணப்படுகின்றன.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பசுகம், பொருள்வரவு, தொழிற்சிறப்பு, விஸ்தரிப்பு வேலைகளால் அலைச்சல், கொடுக்கல் வாங்கற் பிணக்கு, மாணவர் கல்வி மத்திம பலிதம், பெண்களுக்குக் களத்திர சுகம், குடும்பத்தில் கடுமையான உணர்வு, உடல் நலம் பாதிக்கப்படல் வர்த்தகருக்கு மத்திமசுகம், கமத்தொழிலாளருக்கு ஊழியரால் தொல்லை ஆதியன காணப்படுகின்றன.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிற்சிறப்பு, கடன் கஷ்டம் குறைதல், குடும்பத்தில் நிம்மதி, பிரயாணக் கஷ்டம் குறைதல், களத்திர புத்திர சுகம், மாணவருக்குக் கல்விச் சிறப்பு, முன்னேற்றத்திற்கான உதவிகள் கிடைத்தல், வர்த்தகருக்குத் தொழில் நலம், கமத்தொழிலாளருக்கு மத்திமபலிதம், உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் ஆதரவு, பெண்களுக்கு குடும்பசுகம் ஆதியன காணப்படுகின்றன.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிற்சிறப்பு, பணஆதாயம், குடும்பசுக்ம், களத்திர புத்திரவழி உதவிகள், மாதாவழிக் கஷ்டம், கமத்தொழில் முன்னேற்றம், ஊழியர் உதவி, வர்த்தகருக்கு நற்பலன்கள், நாணய உயர்ச்சி, உத்தியோகத்தருக்கு உயர்வு, இடமாற்ற முயற்சி, பெண்களுக்கு குடும்பநலம், நிம்மதியான வாழ்க்கை, பொருட்சிறப்பு ஆதியன காணப்படுகின்றன.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில்நலம், முயற்சிகள் வெற்றி, குடும்பத்தில் சச்சரவு, தாயாதிகளிடையே பகை, கமத்தொழில் நட்டம், கால்நடைக் கஷ்டம், வர்த்தகத்துறையினருக்குத் தொழில் மத்திமசுகம், பொருள் வரவும் செலவும் சமமே, மாணவருக்குக் கல்விச்சிறப்பு, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள்— சக ஊழியர் ஆதரவு, தொழில் மதிப்பு, பெண்களுக்கு குடும்ப சுகம், மாதுருவழி ஆதரவு ஆதியன காணப்படுகின்றன.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பசுகம், நிம்மதி, பணவரவு, தொழிற்சிறப்பு, அதிகாரிகள் ஆதரவு, மாணவருக்குக் கல்விச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பநலம், தெய்வவழிபாடு, பொருள் வரவு, கமத்தொழிலாளருக்கு மத்திமபலன், கால்நடைக் கஷ்டம், வண்டிவாகன லாபம், வர்த்தகத்துறையினருக்குத் தொழில்நலம் ஆதியன காணப்படுகின்றன.

★

### கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் களத்திரசுகம், குடும்பத்தில் நிம்மதி, புத்திர வழி நன்மைபேறுகள், தொழிற்சிறப்பு, வண்டிவாகன லாபம், கடன்வரவு, உத்தியோகத்தருக்கு மத்திமசுகம், வாக்குக்கஷ்டம், கமத்தொழிலாளருக்கு மத்திமசுகம், மாணவருக்கு நன்மைப்பேறுகள், வர்த்தகருக்குத் தொழிற்சிறப்பு, பெண்களுக்கு குடும்ப சுகம், தாயாதிகள் பந்துக்கள் உதவி, தெய்வவழிபாடு ஆதியன காணப்படும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி, நாலாம் பாதம் உத்திரட்டாதி, ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கல்விச்சிறபபு, புத்திரச்சிறப்பு, களத்திரவழி நன்மை, வண்டிவாகன ஆதாயம், கமத்தொழில் நலம் கால்நடைச்சிறப்பு, வர்த்தகத் துறையில் மத்திமசுகம், தொழிலில் பணக்கஷ்டம், உத்தியோகத்தருக்கு மதிப்பு, அதிகாரிகள் ஆதரவு, இடமாற்றம், பெண்களுக்கு குடும்பசுகம், களத்திரத்திற்கு நற்பலன்கள் நடத்தல், பொருள்வரவு ஆதியன காணப்படுகின்றன.

# ஆஸ்திரேலியப் பெண்ணின் மண்ணுசை


வெறும் மண்; அதுவும் ஒரு பிடிமண். இந்த ஒருபிடி மண்ணை புனிதப் பொருளாக அன்புக்கும் பாசத்திற்கும் உரிய பொருளாகக்கருதி அதைத் தன் கண்களால் கண்டு, போற்றிப் பாதுகாக்க ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு வயோதிப விதவை விரும்பினர். அதற்காக அப் பெண் அரும்பாடுபட்டு பிரிட்டனிலிருந்து இந்த ஒரு பிடி மண்ணை வரவழைக்க ஏற்பாடு செய்தார். அதற்குக் காரணம் இதுதான்: அந்த மண் அப்பெண்ணின் காலஞ்சென்ற தகப்பனர் நாள் தோறும் தண்ணீர் ஊற்றி வளர்த்த தோட்டத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.


காலஞ்சென்ற தாய் தந்தையர் வாழ்ந்து மறைந்த ஊரைக் காணவிட்டாலும் அந்த மண்ணையாவது காண அந்த விதவைப்பெண் விரும்பினர். ஆனாலும் அதற்கு அரசாங்கக் கட்டுதிட்டங்கள் குறுக்கே நின்றன. பிரிட்டனிலிருந்து கொண்டு வரப்படும் மண்ணை ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்க முடியாது என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் கண்டிப்பாக மறுத்து விட்டனர்.

சிட்னியைச் சேர்ந்த எல்சி

(8ம் பக்கம் பார்க்க)

ஸி. டபிள்யூ. ஈ.
உங்களுக்கு வரவழைத்துள்ள
ஏககால ஒளி இணைப்புகள்





கிடைக்குமிடம்:
ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா
85, மெயின் வீதி, : : கொழும்பு.
ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்
21, பிறின்ஸ் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE

# தர்மபூமி

**'. . . இந்தவாறாக, முருகு பிள்ளையார் கோவில் தர்மக்காணிக்குள் வந்து குடியேறிவிட்டான் . . .**
**நாள் ஒன்றையொன்று விழுங்கிக் கடைசியாக மாதத்தைப் பிறப்பித்தது. மாதம் முடியாதோ என்று காத்துக் கொண்டிருந்த செல்லத்தம்பி மூப்பர் ஒரு நாள் அவன் வீட்டு வாசலில் 'தோற்றப்பட்டார்'. . .**

**துரை. சுப்பிரமணியன்**

இரவு மரித்து விட்டது. ஆனால் பொழுது இன்னும் புலரவில்லை. இரவின் இறப்பிற்கும் விடிவின்ஜெனிப்பிற்கும் இடைப்பட்ட வேளை. அது சருகிய மைமல் வேளை. காகங்களும் ஒன்றோ இரண்டோதான் கரைய ஆரம்பிக்கின்றன.

முருகு எழுந்து, தட்டியில் சொருகியிருந்த சேலம் பீடியொன்றை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு பொழுது விடிந்த புதுநாளைப் பற்றியசிந்தனையில் ஆழ்ந்தான்.

அடுத்தமாதம் முதலாந்திகதியோடு முருகு தற்பொழுது இருக்கும் வீட்டின் குத்தகைக் காலம் முடிவடைகின்றது. முன்பு எத்தனையோதரம் முருகுவின் கெஞ்சலுக்கு மிஞ்சி ஒன்றும் செய்யமுடியாத நிலையில் குத்தகைக் காலத்தை நீடித்திருந்தும் இந்த முறை, முருகுவின் மனச்சாட்சியே விட்டுக் கொடுத்ததனால் இறுதித் தடவையாகி வீட்டைவிட்டுக் கட்டாயமாக வெளியேறவேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது.

வீட்டைவிட்டு எழும்புவதற்கு இன்னும் ஒருகிழமை தானிருக்கின்றது. அதற்கு முன்பதாக எங்காவது ஒரு காணி பார்க்கவேண்டுமென்ற சிந்தனை மனத்தை நசிக்கின்றது. எனவே முருகு தனக்குத் தெரிந்த இடங்களை எண்ணிப் பார்க்கின்றான்.

செல்லத்தம்பி மூப்பரின் மேற்பார்வையில் சும்மா கிடக்கும் பிள்ளையார் கோயிலைக் கேட்டு அதில் ஒரு கொட்டில் கட்டுவதாக முடிவுக்குவந்தான்.

(2)

சாறுபோக்கிய பனம்பழத்தின் தோற்றம் கொடுக்கும் தலையை மெல்ல வாரிவிட்டு, தனது அகன்ற நெற்றியில் உத்தூளனமாக திருநீற்றை அள்ளி அப்பி, கற்பூரம் எரிந்த கல்லில் தொட்டு ஒரு கறுத்தப்பொட்டும் வைத்து, வாயில் புனிதமாக வெற்றிலையும்போட்டுக் கொண்டு, வழக்கமாகமரக்கறி சாமான் கொண்டுவரும் லெச்சுமியோடு சல்லாபமாக ஏதோ கதைத்துக்கொண்டிருக்கின்றார் செல்லத்தம்பிமூப்பர். மூப்பரின் சிரிப்புச்சத்தம்கேட்ட முருகுவுக்கு மனத்திற்குள் ஆனந்தம். வந்தகாரியம் வெற்றிதான் என்ற எண்ணத்தோடு மூப்பரின் படலையைத் திறக்கின்றான்.

லெச்சுமியோடு கதைத்துக் கொண்டிருந்த மூப்பர் முருகுவைக் கண்டவுடன் ...

"எட முருகு ... என்ன இந்தப் பக்கம்?"–என்றுகேட்டார்.

"சும்மா உங்களிடைத்தான் ஐயா ஒரு அலுவலாய் வந்தனான்."

"என்ன அலுவல் சொல்லு... சொல்லு"

"உங்கடை பிள்ளையார் கோயில் வளவு சும்மாதானே ஐயா கிடக்கு. அதை எனக்குத் தந்தியளெண்டால் நான் ஏதும் மாதம் மாதம் தந்து கொண்டு அதுக்குள்ளே ஒரு கொட்டில் கட்டி இருப்பமெண்டு கேக்கத் தானய்யா வந்தனான்..."

"ஓ ... அதுக்கென்ன என்னவோ பெருமாளுக்கும்காசாப் போச்சு. அதுகும் சும்மாதானே கிடக்கு. மாதம் மாதம் அஞ்சைப் பத்தைத் தந்திட்டு ... என்ன ...?"

"ஓ...மய்யா என்னவோ என்னாலை இயண்டளவு தாறன். அந்தப் பெருமாளுக்கும் தெரியும் எங்கடை நிலைமையைப் பற்றி ..."

"அப்ப வேறை யென்ன...?"

"ஒண்டுமில்லை அய்யா...... சந்தோசம் நான் போட்டுவாறன......"

வாய் நிறைய வெற்றிலை துப்பல் இருந்ததால் தனது இடது கைவிரல் இரண்டைக்கெவராக வாய் உதட்டில் வைத்து அருகில் நின்ற தென்னம்பிள்ளை வேரோடு சாய்ந்து துப்பிவிட்டு மேலும் எச்சிலைக் காறியபடி தலையை ஆட்டுகின்றார் செல்லத்தம்பி மூப்பர்.

முருகு பெரிய புளுகோடு வீடுநோக்கி வருகின்றான். குசினிக்குள்ளிந்து வெளிவந்த அவன் மனைவி பொன்னம்மா வெளிவந்து,முருகுவின் வாயில் நெளியும் புன்சிரிப்பைக் கண்டதும்,

"காரியம் பழம் போல—?" என்றாள்.

இதைக்கேட்ட முருகு "இதென்ன பின்னே காயோ? முருகு வெளிக்கிட்டானெண்டால் ... கி ... கி..."-முருகுவின் மனத்தளத்திலிருந்து எழுந்த சந்தோஷம்சிரிப்போடுசங்கமிக்கிறது. முருகு சிரிப்பதைக் கண்டு அவளும் சிரிக்கின்றாள், தென்னம்பாளை விரிவதைப் போல.

(3)

கதிரவன் தீப்பிழம்புகளை அனலாகக்கக்கும்வேளை, அந்த வெப்பத்தில் உடல்தசை பொரிந்துருக, முருகு தனது வண்டியில்சாமான்களை ஏற்றிக் கொண்டு செல்லுகின்றான். அவனுக்குப் பின்னால் அவனுக்குச் சிறிது கைஉதவி செய்யக் கூடிய வயதடைந்த சிறுவன் அவன் மகன் குணமும் ஏதோ சாமான்களைத் தூக்கிக் கொண்டு கோயில் வளவுநோக்கிப் போகின்றான்.

சாமான்களைக் கொண்டு வந்து சேர்த்தபின் இருவருமாக கொட்டிலைக்கட்டி முடிக்கின்றனர்.

கொட்டில் கட்டி முடிந்ததும் கர்ப்பவதியாயிருந்த பொன்னம்மா, தன் இளைப்பையும் களைப்பையும் பொருட்படுத்தாது அதை மெழுகி முடித்து விட்டாள்.

இவ்வாறாக, முருகு பிள்ளையார் கோயில் வளவில் வந்து குடியேறி விட்டான். நாள் ஒன்றையொன்று விழுங்கிக் கடைசியில் மாதத்தைப் பிறப்பித்தது. மாதம் முடியாதோ என்று காத்துக்கொண்டிருந்த செல்லத்தம்பி மூப்பர், மாதம் முடியும் தறுவாயிலேயே வந்து விட்டார்.

அப்பொழுதுதான் முருகு தொழிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி, அடுப்பிலிருந்து இறக்கிய மீன்வற்றல் குழம்போடு சோற்றிலிருந்து ஆவி பறக்க உண்டுகொண்டிருந்தான். செல்லத்தம்பி மூப்பர் வருவதைக்கண்டதும் தனது உணவை அப்படியே நிறுத்தி விட்டு உடனே வெளியில் வந்தான்.

"என்ன முருகு இப்பத்தான் சாப்பாடுபோலை?"

"ஓமய்யா ... என்ன செய்யிறது ... இப்பிடித்தான் ..."

முருகுவின் வாழ்க்கைச் சுமை அந்த வாக்கியத்தில் பட்டும் படாமலும் இழையோடியது.

"நான் சும்மா வளவையொருக்கால் பார்த்துப்போவமெண்டு வந்தனான், முருங்கைத் தடியள்,கமுகு,தென்னம்புள்ளையெல்லாம் நிறைய வெச்சுக் கிடக்கு... ஏதோ ஆடு காந்தாமல் பாத்துக்கொள்..."

முருகுவின் பிரயாசைக்கு ஒரு முலாம் பூசுகின்றார் மூப்பர். மூப்பர் முற்றத்தில் நின்றபடியே நாலாபக்கமும் கண்களை மேயவிடுகின்றார். அந்த நேரத்தில் முருகுவின் மனைவி பொன்னம்மா தனது சேலைத் தலைப்பில் முடிந்து வைத்த ஐந்துருபாத்தாளை இரண்டு கைகளாலும் மூப்பரிடம் கொண்டுவந்து கொடுக்கின்றாள். மூப்பர் அதைப் பார்க்காமலே வாங்கி மடிக்குள் செருகுகின்றார். பார்க்காமல் வைப்பது பெரிய மனுசருக்குரிய குணமென்று மூப்பருக்கும் தெரியும்.

பொன்னம்மா கொடுத்த பணத்தை வெளியே வந்து பார்த்த மூப்பருக்கு, தான் எதிர்பார்த்ததிலும் அரைவாசி தான் கிடைத்ததால் மனத்திலொரு வெறுப்பு; அதை அவர் முகம் வெளிக்காட்டியது.

(4)

முருகு தனது குத்தகை வளவில் தான் வைத்து உண்டாக்கிய காய் முருங்கை மரத்தில் காய்த்த முருங்கைக்காய்களை கட்டிக்கொண்டு சந்தைக்குப் புறப்பட்டான். வழியில் மூப்பர் செல்லத்தம்பியும் தற்செயலாகச் சந்தித்துவிட்டார்.

"முருகு ... எங்கை முருங்கைக்காய்க் கட்டோடு?"

"இதைக் கொண்டுபோய் விற்றுப் பார்ப்பமெண்டு சந்தைக்குப் போறனய்யா..."

"சரி ... சரி ... கொண்டு போ..."

செல்லத்தம்பி மூப்பரின் கதையில் ஏதோ மறைந்திருந்ததை முருகு அவதானிக்க முடிந்தது.

'என்ன மூப்பர் ஒருமாதிரிக் கதைக்கிறார். என்னத்தை அள்ளிவைக்கிறதுக்கோ தெரியல்லை, தனக்கு ரெண்டு முருங்கைக்காய் குடுக்கல்லையெண்டோ ... ச்சா ... பொன்னம்மா கொண்டு போய்க்குடுத்தாளே அண்டைக்கு ... சரி பாப்பம்,..'

## சிறுகதை

தனது மனத்துக்குள் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டு சென்றான் முருகு.

முருகு கட்டோடு முருங்கைக் காயைக் கொண்டுசென்றதைக் கண்ட செல்லத்தம்பி மூப்பரின் மனத்திரையில் 'இவன் இந்த முருங்கைக்காய்களைக் கட்டுக் கட்டாய் கொண்டுபோய்வித்து நல்லகாசு சம்பாதிக்கிறான். எனக்குத்தான் மாதம் மாதம் அஞ்சுரூவாய்தாறான்' என்ற எண்ணத்தினால் எழுந்த பொறாமைத் தீ பிடிக்க அது 'முளாசி' எரிகிறது முருகுவை. அந்த வளவிலிருந்து எழுப்புமளவிற்கு அது பரவிவிட்டது. 'வாற மாதத்தோடை இவனை அனுப்பத்தான் வேணும்' என்ற முடிவான எண்ணத்திற்கு வந்துவிட்டார். இத்தனையும் அந்த வளவை வேறு யாருக்காவது கூடியகுத்தகைக்குக் கொடுத்து அதில் தானும் ஒருசிறு சம்பாத்தியம்தேடலாமென்ற அடிப்படையில் பிறந்த எண்ணங்கள் தாம்...

(5)

அடுத்தமாதம் முடிந்ததும் முருகுவே குத்தகைக் காசோடு மூப்பர் செல்லத்தம்பியின் வீட்டிற்குச் சென்றான்.

தடிமன் காய்ச்சலுக்கு புளிக்கஞ்சி காய்ச்சி கோப்பையில் ஊற்றி குடித்துக் கொண்டிருக்கின்றார் மூப்பர். முருகுவைக் கண்டதும் கோப்பையை வைத்துவிட்டு முருகுவிற்குக் கிட்ட வருகிறார்.

"முருகு ..."

"ஐயா..."

"காசு கொண்டு வந்தனி போல—?"

"ஓமய்யா ..."

முருகு காசைக் கொடுக்கின்றான்.

காசை வாங்கிய மூப்பர் அதை மடிக்குள் செருகுகின்றார்.

"இஞ்சை முருகு,ஒரு சங்கதியல்லோ..."

"என்னய்யா..."

"நான் சொல்றன் எண்டு குறை நினைக்காதை. உந்தவளவுக்கு மாதம் பதினைஞ்சு ரூவா தாறமெண்டு நேத்து ஒருபகுதி வந்து அச்சாரமும் தந்திட்டுப் போகுது. உன்னாலை எங்கை பதினைஞ்சருபாதரஏலும். அதுகும் கூலிவண்டில் தள்ளுற உனக்கு ... நீ வாறமாதம்முதல் வேறை வளவொண்டைப் பாக்கிறது நல்லது ... நரிக்குண்டு கனகத்திட்டே ஒருவளவுகிடக்கெண்டு கேள்விப்பட்டன் ... அதைப் போய்க் கேட்டுப் பார்..."

மூப்பர்செல்லத்தம்பி பேசிய போது அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த முருகுவின் இரத்தம் கொதித்தது. தான் தனது தேகவலியையும் நேரத்தையும் பார்க்காது, வெறும் கட்டாந்தரையாகக் கிடந்த கோயில் வளவில்முருக்கந்தடிகளையுந்தென்னம்பிள்ளை கமுக மரங்களையும் வைத்துத் தண்ணீரூற்றி வளர்த்துவிட, அதைவேறு யாராவது வந்து நோகாமல் பயனை அனுபவிப்பதா? உழைப்பவன் பெறுத ஊதியத்தை உழைக்காதவன் பெறுவதென்றால் ... முருகுவிற்குப் பொறுக்கவேமுடியவில்லை.

"என்னாலை இப்ப ஒழும்பேலாது ஐயா ..."

"என்ன!"-மூப்பரின் புருவங்கள் உயிர்பெற்று சுருண்டுமேல் நோக்குகின்றன.

"எனக்கு வசதியான நேரம் தான் விருப்பமெண்டால் ஒழும்புவன்."

"ஓகோ...அப்பிடியோ...இந்த மாசம் முடிய வளவு விடல்லையெண்டால் பாப்பம்... அது பிறகு ..."

"நீங்கள் செய்யிறதைச் செய்யுங்கோ..."

"நீ இப்பிடிப்பேசற அளவுக்குப் போய்விட்டாய் ... உங்களுக்கு இடம் தந்ததுதான் பிசகு. இந்தா பார் இந்த நிமிஷம் விதானையைக் கொண்டு வாறன் ..."

விதானையைக் கொண்டு வந்து என்னய்யா செய்யிறது? நானென்ன சும்மாவா இருக்கிறன், மாதம்மாதம் நிலவாடகைதாறன். ஆர் வந்தாலும் எங்களை ஒழுப்பேலாது. அந்தக்காலம் மலையேறிவிட்டுது..."

"என்னடா கனக்கப் பேசுறாய் ... வலோற்காரமாய் இருந்துகொண்டு..."

"ஐயா நான் கணக்குவழக்காகத்தான் பேசுகிறன். கோயில் வளவுதான் குத்தகைக்குக் குடுக்கிறியள். போய் வழக்கைவையும்...... அதை மறந்து போனபடியால்தான் என்று சொன்னன்."

முருகு, மூப்பர் 'ஐயா' முன்னிலையில் மேலும் நிற்காமல் குத்தகை நிலத்தை நோக்கி, கோயில் வளவை நோக்கி,தர்மபூமியில் தான் கட்டிய தன் வீட்டை நோக்கிநடந்துகொண்டிருக்கின்றான்.

மூப்பர்செல்லத் தம்பியின் பார்வை முருகுவை அவனது மறைவுவரை துரத்திச் செல்கிறது...

(யாவும் கற்பனை)

# பங்குனிப் பொங்கல்

—"முருகு"—

**அம்பலக் கூத்தனின் விக்கிரகம் பொன்னாலானது. யானை முகத்தான் சாணத்தில் ஆனவன். மதிப்பு – பக்தி - ஒன்றுக்கொன்று குறைவா? மனதில் தான் பக்தி-அன்பு-இன்பம்-அழகு .... .... ....**

பானையின் நீரைக் கொதிப்பூட்ட விறகுகளை அடுப்பிற்குள் எடுத்து வைக்கின்றாள். புகையெழுகின்றது. கண்கள் கலங்குகின்றன, நயன விளிம்புகளில் தேங்கும் நீர் மடையின்றி அச்சிறுமேட்டின் மேலாக எழுந்து - கருமயிர்களை நனைத்தவாறு மெல்ல கன்னத்தில் வழிகின்றது.

புகையின் மத்தியிலே அவள் - அவள் தான் என் மனைவி, ஒன்றறக்கலந்து கருமையுடன் கருமையாய் நிற்கின்றாள். என் னுள்ளத்தில் மூட்டங்கள் எழுந்து பரவி – கருமேகங்களாய்-விறகிலிருந்தெழும் புகையாய் எரிச்சலை மூட்டுகின்றன.

தேங்காய்ப்பூ உதிர்ந்து பெட்டிக்குள் சொரிகிறது அப் பூக்களுடன் பூக்களாய் என் அடிமனதினின்றும் சிந்தனைகள் எழுந்து மனக்குடலைக்குள் நிறைகின்றன. என் நயனங்கள் அவளை நோக்கி ஏற்றமிட்டுச் சரிகையில் வெறுப்பே மிஞ்சித் தங்குகின்றது.

மூன்று மாதங்கட்கு முன் நடந்தவை என் மனப்பிராந்திய வெளியிலே தங்குதடையின்றி எழுந்து-பரவி-உலாவி-சூல்கொண்ட முகில்களாய் மாறுகின்றன,

தாயாரின் தந்தி கண்டு புறப்படுகின்றேன் - ஊருக்கு வந்ததும் கல்யாணப்பேச்சு! இருபத்தெட்டு வருடங்களாய்க் காத்துத் தவமிருக்கும் எனக்கு மகிழ்ச்சியின் மத்தியில் பொறுப்பும் சூழ்ந்து விலங்கு பூட்டுகின்றது. புகைப்படத்தை வாங்கிவரும்படி 'புரோக்கரிடம்' கூறுகின்றேன். படத்தைக் கையில் கொண்டு அந்த உருவத்தை நோக்கியதும் என் ஆத்மா உயரப் பறக்கின்றது.

இவையெல்லாம் அன்று.

தாயாருக்குத் தெரியாமல் எத்தனை தடவைகள், நான் புகைப்படத்தில் உள்ள அவளின் அங்க அவயவங்களை எண்ணத்தில் சுவைத்தேன்? இன்பத்தை-அழகைப் பருகத் துடித்தன என் அங்கங்கள்.

ஆனால்...? ஆனால்...?

புகைப்பட அழகியின் நயனம்...?

அவளின் நெற்றியில் தவழ்ந்து விளையாடும் அச்சிறு சுருள் கேசம் எங்கே...?

அந்த அகன்ற... துடிப்பின் எல்லையின் நின்று அவஸ்தையுறும் அதரங்கள்...?

என் மனையாளை நோக்கினேன். அவள் பானை நீருக்குள் பாலினை ஊற்றுகின்றாள்.

கைகளை உதறி விட்டு நான் தொடர்ந்து தேங்காயினைத் துருவுகின்றேன்.

பூக்கள் உதிர்கின்றன...

எனக்கு விவாகம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

அழகு... அழகு...

இன்பம்... இன்பம்...

எனக்கு வேண்டியவை இவையிரண்டும் தான். வீட்டிற்கு வெள்ளையடிக்கும்போது என் எண்ணங்களுக்கும் வெள்ளையடித்தார்கள். சிந்தனைகள் புதுவழியில் திரும்பி ஜுவாலையிட்டன.

(9ம் பக்கம் பார்க்க)

# நச்சுக்கிருமி நோய்களுக்கு நவீன விஞ்ஞான வைத்தியம்

## ஆராய்ச்சிக்காக எவரெஸ்ட் சிகரம் ஏறுவர்

மிக நுண்ணிய நச்சுக் கிருமிகளால் ஏற்படும் அம்மை, இளம்பிள்ளை வாதம், ஜலதோஷம், மஞ்சள் ஜுரம் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கான வகையில் "இன்டர் பெரான்" என்ற புது வகையான மருந்துப் பொருளைத் தயாரிப்பது பற்றி அமெரிக்காவில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்ருல் இந்த நோய்களை குணமாக்குவதில் பெரும் முன்னேற்றம் ஏற்படும்.

நச்சுக்கிருமிகள் வளர்வதைத் தடுக்கக்கூடிய "இன்டர் பெரான்" என்ற இந்த நச்சுக் கொல்லி சாதாரணமாக மனித உடலிலும், பிராணிகளின் உடலிலும் இயற்கையாக உற்பத்தியாகிறது. சொல்லப்போனுல் மனிதர்கள் உயிர் வாழ இவை அத்தியாவசியமானவை

நச்சுக் கிருமிகளால் ஏற்படக்கூடிய நோயினுல் பாதிக்கப்படுகிறவர்களில் சிலர் சீக்கிரமாக குணமடைந்து விடுகின்றனர். இவர்களது உடலில் "இன்டர் பெரான்" அதிகம் உற்பத்தியாவதே இதற்குக் காரணம். மற்றும் சில சமயங்களில் அதிக ஆபத்தில்லாத நச்சுக் கிருமிகளால் நோய் ஏற்படும்போதும் இவை உடலில் "இன்டர்பெரான்" அதிக அளவில் உற்பத்தியாகும்படி செய்வதால் இவ்வித நோய்கள் ஆபத்தில்லாதவையாக உள்ளன.

இளம்பிள்ளை வாதம், பெரியம்மை, மஞ்சள் ஜுரம், இன்புளுவன்சா, சாதாரண ஜல தோஷம் ஆகியவை 'வைரஸ்' எனப்படும் நச்சுக் கிருமிகளால் ஏற்படுகின்றன. இந்த நச்சுக் கிருமிகள் உடலில் திசுக்களில் உள்ள 'செல்' களுக்குள் சென்று இந்தச் செல்களின் மூலம் தங்களின் இனத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

இந்த கிருமிகளின் இனப்பெருக்கத்தை "இன்டர் பெரான்" தடுக்கிறது. இவை செயல்படும் விதம்பற்றி சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் சர்வகலா சாலையைச் சேர்ந்த ஆர். இசர்ட். லாச்ஹார்ட், டி. சிரீவல்சான் ஆகிய இருவரும் அமெரிக்க தேசிய விஞ்ஞானக் கழகத்துக்குத் தெரிவித்துள்ளனர். நச்சுக்கிருமிகளின் இனப்பெருக்க அடிப்படையையே "இன்டர் பெரான்" அழித்து விடுகிறது என்று அவர்கள் கூறியுள்ளனர். அதாவது இந்த நச்சுக் கிருமிகளை "இன்டர் பெரான்" மலாடக்கி விடுகிறது என்று அவர்கள் கூறுன்றனர்.

'வைரஸ்' என்னும் இந்த நச்சுக் கிருமிகள் மிகமிகச் சிறியவை. எலச்டிரான் உருப்பெருக்கிக் கருவி மூலம்தான் இவற்றைக் காண முடியும். இவை அதிசயத் தன்மை கொண்டவை. இவை உயிரற்ற ஜடப் பொருள், உயிருள்ள ஜீவராசி இரண்டுக்கும் இடைப்பட்ட தன்மை கொண்டவையாக உள்ளன. உயிர்த் திசுக்களிலிருந்து இந்த நச்சுக் கிருகிகளை தனியே பிரித்தால் இவை உயிரற்ற பளிங்குகளாக உள்ளன. இவ்வாறு ஜடமாக இருப்பவை மனித உடலில் புகுந்தால் உடனே இனப்பெருக்கத்தில் ஈடுபட ஆரம்பிக்கின்றன.

இவற்றின் இனப் பெருக்கத்தைத் தடுக்க ல்ல 'இன்டர் பெரான்' முதலில் லண்டன் தேசிய வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் டாக்டர் அலெக் ஐசாக்ஸ், ஜுன் லிண்டென்மான் ஆசியவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

இன்டர் பெரானைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது.

இதைக் கண்டு பிடித்தவர்வள் சொல்வது இதுதான்: "என்ருவது ஒருநாள் ஊசி மூலம் உடலுக்குள் இன்டர் பெரானை செலுத்துவதன் மூலம் நச்சுக் கிருமி நோய்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றும் நிலை ஏற்பட்டுவிடும்"

'ஹார்மோன்' எனப்படும் சுரப்பிகள் உயிரினங்கள் அனைத்திலுள்ளும் இருக்கின்றன. உயிரியக்கத்தை ஒரே சீருடன் நடத்திச் செல்லும் தூதுவர்களான அவை பல உள்ளன. அப்பேர்ப்பட்ட சுரப்பிகளில் ஒன்றைக் கண்டு பிடிப்பதற்காக 21 அமெரிக்கர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறவிருக்கிருர்கள்.

ஒரு மனிதன் மலையுச்சியில் உயர ஏறும்போது மலையுச்சியிலுள்ள குறைவான காற்று மண்டலத்திற்கேற்ப அம்மனிதனின் உடல் தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளும் தன்மை பெற்றுவிடுகிறது. போதுமான உயிர்வளி கிடைக்கும் வகையில், அவனுடைய குருதியோட்டத்தில் சிவப்பு அணுக்கள் பெருகிக்கொள்கின்றன.

இந்தப் பணியைச் செய்யும் சுரபபி எது என்பதை மேற்படி எவரெஸ்ட் பயணத்தில் கண்டறிவார்கள். ஏற்கனவே அந்தச் சுரப்பியை நிபுணர்கள் அறிந்திருந்தாலும், அதனைத் தனிப்படுத்தி அறியமுடியவில்லை.

அதனைத் தனிப்படுத்திவிட முடியுமானுல் 'குருதிச் சோர்வு' எனப்படும் இரத்தச்சோகை நோயைக் குணப்படுத்திவிட முடியும்.

---

# நமது நூல் நிலையம்

**தென்னவன் பிரமராயன்** (நாடகம்) ஆசிரியர்: 'தேவன்' — யாழ்ப்பாணம். வெளியீடு: ஆசீர்வாதம் புத்தகசாலை, 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம், பக்கம் 58. விலை: ரூபா ஒன்று.

செந்தமிழ்ச் செல்வம் செழித்த யாழ்ப்பாணத்தில் இன்பநலங்கெழுமிய நாடகங்கள் வெளிவருவது போற்றற்பாலதே. பழைய நாடக நூல்கள் மிகச் சிலவே இருக்கின்றன. காலவியல்புடன் விறுவிறுப்பான கருத்தமைந்த நாடகங்கள் தோன்றவேண்டும். சிலர் நாடகங்களை எழுதிவெளியிட முன்வந்திருக்கின்ருர்கள். தமிழன்னை அதுகண்டு மகிழ்வாள். இளைஞர்களாலேதான் அப்பணி பரவவேண்டும்.

"தென்னவன் பிரமராயன்" என்னும் அரிய நாடகநூல் உருவில் சிறிதாயினும் பொருளில் மிகப் பெரியது. சமயாசாரியர் நால்வருள்ளே ஒருவரின் சரித விளக்கமான இதனைப் படிக்கப் படிக்க இனிய தேன் சுவை ஊறும். தென்னவன் பிரமராயர் மணிவாசகராகிப் பக்திச்சுவை சொட்டப் பாடிய அதிமதுரச் செய்யுட்கள் இடையிடையே நின்று மனதைக்கவருகின்றன. மணிவாசகர் பாடல்களைச் சபாநாதப் பெருமானே ஏடு வாங்கி எழுதினுரேயானுல் அவர் பெருமையையும் தமிழின் பெருமையையும் எங்ஙனம் வியப்போம்! கல்நெஞ்சையும் நெகிழ்விக்கும் பாசுரங்களை ஆசிரியர் ஆளும்முறை நன்ருயிருக்கின்றது. இலங்கையில் கலைக்கழகத்தினரின் பரிசு பெற்ற நாடகம் இது.

இந்நாடகம் பதினெருகாட்சிகளைக் கொண்டது. இவ்வாசிரியர் முன்னும் சில நூல்கள் எழுதியுள்ளார். இதுபோன்ற பல நூல்களை அவர் மேலும் எழுதிவெளியிடுவார் என்று நம்புகின்ருேம். கலாநிதி திரு. சு. வித்தியானந்தன் எம். ஏ., கலாநிதி திரு. கா. கைலாசநாதக் குருக்கள் எம். ஏ., சித்தாந்த சிகாமணி திரு. மு. ஞானப்பிரகாசம் பி. ஏ. ஆகிய அறிஞர்களின் சிறப்புரைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. தமிழுலகம் இதனை வரவேற்று ஆசிரியர்க்கு ஊக்கமளிக்குமாக!

— வி. எம். ஆர்.

**வாழ்வு: (சிறுகதைகள்)** ஆசிரியர்: நாவேந்தன். வெளியீடு: தமிழ் குரல் பதிப்பகம், ஏழாலை வடக்கு, சுன்னுகம். பக்கம் 120. விலை ரூ. 2. 50.

'இலக்கியத்தின் பொதுவான அடிப்படையான 'வாழ்வு' இக்கதைகள் முழுமையும் இழையோடி இலங்குவதால் இத்தொகுப்பு 'வாழ்வு' என இடம் பெறுவதாயிற்று' என ஆசிரியர் தமதுமுன்னுரையில் குறிப்பிடுகிருர்.

இப்படியாக, மண்ணுலக வாழ்வு இழையோடி நிற்கும் இக்கதைகளில் அங்கொடை மனநோய் மருத்துவமனையில் சிகிச்சைபெறச்சென்ற தமிழ் எழுத்தாளர் முதலாக இழுவைவண்டி நாகப்பன்வரை பல பாத்திரங்களைச் சந்திக்கலாம். நகரசுத்தித்தொழில் புரியும் நல்லான், சுடலையில் வாய்க்கரிசி போட்ட காசு பொறுக்கும் கிராமத்துச் சிறுவன், அடுத்த வீட்டுக் கன்னி சரசா, குடையை எடுத்துக்கொண்டு திரும்பியும் பார்க்காமல் வேகமாக நடையைக் கட்டும் ஆறுமுக வாத்தியார், எஸ். எஸ். ஸி. மாணவிகள் உள்ளத்தில் எடுத்த எடுப்பில் ஆழப்பதிய வைக்கும் கவர்ச்சி பெற்ற நவயுக ஆசிரியர் ஆறுமுகம் - ஆகியோர் சினிமாத் திரையில் தோன்றி மறைகிற நிழல் உருவங்களாக இல்லாமல் நாடக மேடையில் நமக்கு இரண்டடி எட்டிநின்றுபோல நின்று விருத்தம்பாடும் நூல சரீரங்களாகவே தோற்றமளிக்கிருர்கள்.

எழுத்தாளரும் பத்திரிகைக்காரரும் பல கதைகளில் கதாபாத்திரங்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மொத்தம் பதினைந்து கதைகளில் பலகதைகள் 'கணக்கு வழக்காக' கச்சிதமாக உள்ளன.

— "ஜனுர்த்தனன்"

**வரப்பெற்ருேம்:** நுண்தொழில் இளைஞன் (யாழ்ப்பாணம் கனிட்ட தொழில் நுட்ப பாடசாலை வெளியீடு.) பக்கம்: 67.

திருக்கோணேஸ்வரர் பக்தி இசைப்பாமாலை. ஆக்கியோன்: கட்டுவனூர் திரு. த. வி. சுப்பிரமணியம்.

---

# பட்டம் பெற்றவருக்கு பஸ் கண்டக்டர் வேலை

பஞ்சாப் சர்வகலாசாலையில் என்ஜினீரிங் படிப்பு படித்து பட்டம் பெற்ற தேவிந்தர்சிங் பாபா என்னும் 22 வயது சீக்கிய இளைஞர் பிரிட்டனில் பர்மிங்ஹாம் நகரில் பஸ்கண்டக்டர் வேலை பார்க்கிருர்.

கடந்த ஜுன் மாதத்தில் லண்டனுக்கு வந்த இவர் மேற்கு புரோம்விச் கல்லூரியிலும் தொடர்ந்து என்ஜினீரிங் படிப்பு படித்தார். என்ஜினீரிங் தொழில் 'அப்ரண்டிஸ்' ஆக பணியாற்ற பலதடவை முயன்றும் வேலை கிடைக்காததால் இவர் பஸ் கண்டக்டர் வேலையில் சேர்ந்தார்.

புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் எப்போதும் சுறுசுறுப்பாக காட்சியளிக்கும் இவர் பஸ் பிரயாணிகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

---

# மரண தண்டனை அவசியமா?

## ஐ. நா. சபையில் ஆலோசனை

கொடிய குற்றங்கள் புரிபவர்களுக்கு மரணதண்டனை புரிபவர்களுக்கு மரணதண்டனை விதிக்கும் முறையானது இக்குற்றங்கள் அதிகரிக்காதபடி தடுப்பதற்காக உள்ளதா என்பதுபற்றி அரசாங்கங்கள் தொடர்ந்து பரிசீலிக்கவேண்டும் என்று இப்பிரச்னைபற்றி ஆராய்ந்த ஐ. நா. கமிட்டி கருத்துத் தெரிவித்துள்ளது.

பெருவாரியான நாடுகளில் மரணதண்டனை விதிக்கும்முறை இருந்து வந்தாலும்கூட, மரண தண்டனை ரத்துச்செய்யப்பட வேண்டும் என்று பொதுவாக நிபுணர்கள் கருதுகின்றனர் என்பதை இக்கமிட்டி சுட்டிக் காட்டியுள்ளது.

8 நாடுகளைச்சேர்ந்த நிபுணர்கள் மரணதண்டனைபற்றி மேற்படி அறிக்கையை தயாரித்தனர். சுமார் 60 நாடுகளிலிருந்து ஐ. நா. சபை பெற்ற தகவல்கள், குற்றத்தடுப்புத்துறை நிபுணர்கள் அனுப்பிய தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பாரிஸ்நகரில் உள்ள சட்ட ஒப்புமைக்கழகத்தின் குற்ற ஆராய்ச்சிப்பிரிவு டைரக்டரும், பிரெஞ்சு சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதியுமான மார்க்அன்செல் மரணதண்டனைபற்றி கூறியுள்ளதை ஐ. நா. கமிட்டி குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

"மரணதண்டனையை ரத்து செய்வதால் இத்தண்டனையை விதிக்கத்தக்க கொடிய குற்றங்கள் பெருகுவதாக சொல்ல முடியாது என்பது இதுரை சேகரிக்கப்பட்ட விவரங்களிலிருந்து தெரியவருகிறது" என்று மார்க் அன்செல் கூறியிருக்கிருர்.

இப்போது உலகில் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை அமுலில் இருந்து வருகிறது. 26 நாடுகள் மரண தண்டனை விதிப்பதை ரத்து செய்துள்ளன. இன்னும் 4நாடுகளில் சட்டபூர்வமாக மரண தண்டனை இருந்துவந்தாலும் கூட, கொடிய குற்றவாளிகளுக்கும் அத்தண்டனை விதிக்கப்படுவதில்லை.

"கொலை தவிர மற்ற குற்றங்களுக்கும்கூட மரணதண்டனை விதிக்கும்முறை இப்போது உலகில் குறைந்து வருகிறது" என்று ஐ. நா. கமிட்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆனுல் அரசியல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கும் முறை இப்போது மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளது என்று இக்கமிட்டி சுட்டிக்காட்டியுள்ளது.

சில நாடுகளில் மரணதண்டனை விதிப்பதற்குப்பதிலாக சிறைத் தண்டனைக் காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனுல் இவ்வாறு சிறைத் தண்டனையை நீடிப்பது சரியல்ல, ஏனெனில் விரைவில் விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையை குற்றவாளிகள் இழந்துவிடுவார்கள். எனவே இவ்விதம் நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறவர்கள்பற்றி அவ்வப்போது பரிசீலிக்கப்படவேண்டும்" என்று இக்கமிட்டி கூறியுள்ளது.

"மரணதண்டனை விதிப்பதானது கொடிய குற்றங்கள் நடைபெருமல் தடுப்பதாக உள்ளதா என்பது பெரிதும் சர்ச்சைக்குரிய விஷயமாகும். எனவே இது தொடர்ந்து பரிசீலனை செய்யப்படவேண்டும், என்று ஐ. நா. கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது. இககமிட்டியின் அறிக்கை ஐ. நா. பொருளாதாரக் கவுன்சில் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்".

---

# சொகுசு வீடுகள்

முன்னதாகவே கட்டப்பட்ட சொகுசான "ஆயத்த வீடுகள்" (ரெடிமேட் வீடுகள்) நியூயார்க்கில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவை மிகவும் கனமில்லாதபடி அலுமினியத்தால் கட்டப்பட்டவை. பார்ப்பதற்கு மிகச் சொகுசாக இருக்கின்றன. இவற்றை உலகின் எந்தப் பகுதிக்கும் அனுப்பக்கூடிய மாதிரியில் நேர்த்தியாகச் செய்திருக்கிருர்கள்.

---

# அதிபர் ஆயுளுக்கு ரூபா $2\frac{1}{2}$ கோடி இன்ஷூரன்ஷ்

அமெரிக்க கம்பெனி ஒன்று அதனுடைய அதிபரின் ஆயுளை இரண்டுகோடியே 38 லட்ச ரூபாய்க்கு (50 லட்சம் டாலர்) இன்ஷூர் செய்துள்ளது.

ஒரு தனிப்பட்ட நபரின் ஆயுள் இவ்வளவு பெரிய தொகைக்கு இன்ஷூர் செய்யப்படுவது இதுவே முதல் தடவை என்று கருதப்படுகிறது.

---

# இத்தாலியில் யப்பானியக் கார்கள்

யப்பானைச் சேர்ந்த உறினே மோட்டார் கம்பெனியார் தங்களுடைய கொண்டெசா 900கன சென்டிமீட்டர் காரை, மிலானுக்கு அருகிலுள்ள ஒரு புதுத் தொழிற்சாலையில் கட்டுவதற்குத் திட்டமிட்டு வருகின்றனர்.

இத்தாலிய பாணியில் செய்யப்பட்ட காரின் எந்திர உறுப்புகள் யப்பானிலிருந்து கட்டுமானத்திற்கென மிலானுக்குக் கொண்டுவரப்படும். காருக்கான டயர்கள், ரேடியேட்டர் மற்றும் இதர மின்சாரச் சேர்க்கை உறுப்புகள் ஐரோப்பாவில்வாங்கப்பெறும். மேற்படி கம்பெனி 1965 க்குள் மிலானில் 100,000 கார்களைக் கட்டி முடித்துவிடத் திட்டமிடுகிறது

---

# சிறுவர் விட்ட ராக்கெட்

பதினேழு வயதுள்ள இயான்ஸ்ஸீப், டேவிட் ஜெப்சன் என்னும் இரு சிறுவர்கள் தாங்களாகவே செய்த நாலடி நீளமுள்ள (ராக்கெட்) வாணம் "நிம்பஸ்" என்னும் பெயர் கொண்டது-மணிக்கு 500மைல் வேகத்தில் சுமார் இரண்டு மைல் உயரம் பறந்து சென்றது. இந்த வாணத்துக்கு எரி பொருளாகக் கந்தகமும் துத்தநாகமும் கலவை செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. இதற்கான செலவு சுமார் 26 ரூபாய்தான்.

இவ்விருவரும் அடுத்துவிட்விருக்கும் "நிம்பஸ் 2" என்னும் இரண்டுகட்ட வாணம் ஏழு மைல் உயரம்வரை போகுமென்று அவர்கள் நம்புகிருர்கள்.

---

# புகைப் பழக்கத்தை நிறுத்த மருத்துவ விடுதி

புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிட விரும்புபவர்கள், அல்லது மருத்துவக் காரணங்களுக்காக அப்பழக்கத்தை நிறுத்தச் சொல்லியும் நிறுத்த முடியாதவர்கள் ஆகியோருக்கு ஆலோசனைகள் நல்கிப் புகை பிடிப்பதை விட்டொழிக்கச் செய்வதற்கென ஒரு மருத்துவ விடுதியை பிரிட்டனில் சுகாதார அமைச்சரவையின் தலைமையகத்தில் திறந்திருக்கிருர்கள்.

இந்த மருத்துவ விடுதி புகைபிடிபபவர்கள் அப்பழக்கத்தை விட்டுவிடத் தகுந்த ஆலோசனைகள் தரும்.

# நாடக மேடை

## பலி

நாடகம் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் நடத்தப்படுவதல்ல. அது மக்களின் உள்ளத்தில் ஊறி மக்களின் வாழ்க்கைமுறையை நல்ல முறையில் மாற்றியமைக்க உதவும் கருவி என்பதை இராமநாதன் கல்லூரி மாணவிகள் தமது 'பலி' என்ற நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தி விட்டார்கள்.

மகாகவி தாகூரின் பலி ('Sacrifice') தத்துவார்த்தமான நாடகத்தை தமிழில் அரங்கேற்றிய பெருமையும் இராமநாதன் கலைக்கழகப் பட்டதாரி மாணவிகளுக்கே சாரும்.

பிச்சைக்காரப் பெண் சுபர்ணவின் வேண்டுதலுக்கிணங்கி காட்டிலே பலியை நிறுத்துகின்றான் அந்நாட்டு அரசன். இதை மையமாகக்கொண்டது 'பலி'.

ஏழை அபர்ணவாக வந்த செல்வி மனோஹரி நடராஜா இன்னும் சிறிது இயற்கையாக நடித்திருக்கலாம். மேடையில் தோன்றும்போதெல்லாம் எல்லாக் கட்டங்களிலும் ஒரேமாதிரியாக நின்றுகொண்டிருந்தது நடிப்பின் தரத்தை சிறிது குறைத்துவிட்டது என்றே கூறத்தோன்றுகிறது. சிறிது கவனம் செலுத்தியிருந்தால் பாத்திரம் நன்கு பரிணமித்திருக்கும்.

மிருகபலி ஒழிப்பை பிடிவாதமாக எதிர்த்த காளிகோயிற் பூசகராக நடித்த செல்வி தங்கா அந்தப் பாகத்தை உணர்ந்து நடித்தார். வார்த்தையிலும் நடிப்பிலும் கடுமையும் கொடுமையும் காட்டியது நன்றாக அமைந்திருந்தது. ஆனால் அவசிய தேவை இல்லாத இடங்களில் கொடுமையைக் குறைத்திருக்கலாம்.

பூசகரின் வளர்ப்புப்பிள்ளையாகவும் ஆழ்ந்த அறிவாளியாகவும் இருந்தும் அடிக்கடி புத்தி தடுமாறும் தன்மையால் முடிவில் தானே தன் உயிருக்கு உலைவைத்த ஜையசிங்கனாக நடித்த செல்வி இராஜேஸ்வரிக்கு சில சமயங்களில் அவரது குரல் அவருடன் ஒத்துழைக்க மறுத்தாலும் கொடுத்த பாகத்தைக் குறையின்றி நடித்தார் என்று கூறலாம்.

காளிதேவிக்கு பூஜை நடைபெறும் கட்டத்தில் செல்வி சிவயோக நாயகியின் கரகமும், செல்வி சகுந்தலாவின் உடுக்கும் புதுமையற்றுப் புகுத்தப் பட்டிருந்தாலும் சலிப்புத்தட்டாமல் இருந்தது.

மன்னான் தம்பியாக நடித்த செல்விசந்திராவும் மற்ற நடிகர்களும் குறைகூற முடியாதபடி நடித்தனர்.

அரங்கஅணிகளும் பின்னணி இசையும் பொருத்தமாக இடம் பெற்றிருந்தன.

நடிகர்கள் இன்னும் சிறிது நடிப்பில் அக்கறை காட்டியிருந்தால் நாடகம் மேலும் வெற்றியடையும் எனலாம்.

—கணேஷ்

## ஈழத்து வீரன்

நல்லூரை ஆட்சி செய்த சங்கிலிய மன்னனின் சரித்திர வரலாற்றுச் சுருக்கம்தான் 'ஈழத்துவீரன்.'

அழிந்து சிதைந்துபோன பண்டைய தமிழ்மன்னர்களின் வரலாறுகளை, சிறந்தமுறையில் மெருகூட்டி தமிழ்மக்களிடையே சரித்திர வரலாறுகளை நினைவூட்டும் முயற்சியாக இயல் இசைநாடகமன்றத்தினர் தமது 12-வது தயாரிப்பான 'ஈழத்து வீரனை' மனோஹராவில் மேடையேற்றியதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளனர் என்று கூறலாம்.

ஈழத்துவீரன் சங்கிலியமன்னனாக நடித்த எம்பெருமான் அசல் சங்கிலி மன்னனாகவே காட்சியளித்தார் எனலாம். பறங்கியரைச்சந்திக்கும் கட்டங்களில் மிடுக்குடன் அவர்பேசும் வார்த்தைகள் கனல்கக்குகின்றன.

அமைச்சன் மாப்பாணனாக துரைராஜன் நடித்தார். அவர் எல்லா கட்டங்களிலும் ஒரே மாதிரியாக நடித்ததால் நடிப்பு அவ்வளவு நன்கு சோபிக்காது போய்விட்டது. ஏற்றம் இறக்கம் இவற்றை கவனித்து நடித்திருந்தால் தரம் உயர்ந்திருக்கும்.

சங்கிலியன் மைந்தன் வியத்தேவனாக நடித்த சிவலிங்கம் கச்சிதமாக நடித்துள்ளார். அப்பாமுதலியின்மகள் வடிவுடன் காதல்காட்சிகளில் தோன்றும் பொழுது கனிவுடன் குழைந்து நடித்துள்ளார்.

சங்கிலிமன்னனின் மனைவி சங்கிலித்தேவியாக வந்த சரஸ்வதி, மகன் விஜயத்தேவனின் பிரிவை நினைந்து நல்லூர் முருகனை வழிபடும்காட்சி மனதில் நிறையும்காட்சி.

காட்சிகளில் வாள்சண்டையைப் புதுவிதமாகப்புகுத்தியது பாராட்டத்தக்கது. ஆனால் நாடகத்தில் சிலவழமையான குறைகளும் இருக்கத்தான் செய்தன. சங்கிலித்தேவி முருகனின் திருவுருவப்படத்துக்கு முன்னால் தேவியின்பாட்டைப் பாடியது சிறிது குறையாகவே தோன்றுகிறது.

காட்சிஜோடனைகளிலும் ஒளி வேலைகளிலும் அதிக சிரத்தை எடுத்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

கதைவசனம், டைரக்ஷன் முதலிய பொறுப்புக்களைக் கையாண்ட எம்பெருமான் எல்லோரது பாராட்டையும் பெறக்கூடியவரே.

மேக்கப் ராசா ஒப்பனையில் தமது கற்பனையையும் நன்கு கலந்துவிட்டார்

—வாமா

## மனக்கோவில் உனக்காக

கொலைகாரன் ஒருவனைப் பிடிக்க இன்ஸ்பெக்டரும் மனைவியும் முயற்சி செய்தால் அதில் எவ்வளவு தந்திரங்களும் உபாயங்களும் இடம் பெறும் என்பதை நகைச்சுவையோடு பின்னி நாடகமாக்கி "மனக் கோவில் உனக்காக" என்ற பெயரில் நாவுக்கரசன், கோண்டாவில் சைவவித்தியாசாலையில் மேடையேற்றியதைப் பார்த்தவர்கள் ஒருவித புதுமையை ஓரளவாவது அனுபவித்திருப்பார்கள்.

நாடகத்தில் ஆறுகாட்சிகளே இடம்பெற்றது, ரசிகர்களிடையே சலிப்பை ஏற்படாது காப்பாற்ற உபயோகிக்கப் பட்ட உத்தி என்றேகூறவேண்டும். குறைந்த நேரத்தில் விறுவிறுப்பான நாடகங்களையே ரசிகர்கள் இன்று பெரிதும் விரும்புகின்றார்கள் என்பதை இந்த நாடகத் தயாரிப்பாளர்கள் அறிந்துவைத்திருந்தது பாராட்டத் தக்கது.

செல்வமாக நடித்த எம். என். குணச்செல்வம் எல்லாருடைய பாராட்டையும் பெற்றார். சில காட்சிகளில் திறமையை வெளிப்படுத்தினார் என்று சொல்லும்படி நடித்தார். குடிகாரனாக நடிக்கும் போது ஏனோ சோபிக்கவில்லை. ஏழுமலையாகநடித்த எம். என். இராசையா பாத்திரத்தை உணர்ந்து ஒன்றி நடித்தார். கதையின் ஜீவநாடியே ஏழுமலைதான். அவரின் நடிப்பு நாடகத்திற்கு வெற்றியைத் தேடிக்கொடுக்க உதவியது. இன்ஸ்பெக்டர் சுந்தராகவும் கதாநாயகன் வாசுவாகவும் நடித்தவர்கள் இன்னும் சிறிது கவனம் செலுத்தி நடித்திருக்கலாம்.

பிரபாவாக நடித்த மனோன்மணி நடிக்க முனைந்திருக்கிறார். என்றாலும் முன்னேற இடம் நிறைய இருக்கிறது. அவர் நடனம் நன்றாக இருந்தது.

நாடக இயக்குனர் நடிகர்களுக்கு இன்னும் பயிற்சி கொடுத்து ஒளி, ஒலி முதலிய விஷயங்களில் மேலும் அக்கறை காட்டியிருந்தால் நாடகம் மேலும் மெருகுபெற்றிருக்கும்.

க. க.

## 5-வது முறையாக மணந்த நடிகை

ஹாலிவூட்டின் மிகச் சிறந்த நடிகைகளில் ஒருவராக விளங்கியவரும் 57 வயது நிரம்பியவரும் இதுவரை நான்குமுறை விவாகரத்துச்செய்துகொண்டவருமான ஜோன்கிராபோர்டு அமெரிக்கக்கோடீஸ்வரர்களில் ஒருவரான நெல்ஸன் ராக்பெல்லரை மணந்துகொண்டார்.

ஏற்கனவேஒருமுறைமணந்து விவாகரத்துச் செய்துகொண்ட நெல்சன் அமெரிக்க மாகாணங்களில் ஒன்றில் கவர்னராக இருந்துவருகிறார்.

# கலை ★ அரங்கம்



## பெரிய மனிதன்

நினைப்பதற்கு நேரமில்லை என்ற படத்தைத் தயாரித்துள்ள நடிகர் டி. கே. ராமச்சந்திரன் அடுத்ததாக 'பெரிய மனிதன்' என்ற பெயரில் ஒரு சமூகப்படத்தைத் தயாரிப்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்.

## சினிமாப் பைத்தியம்

ஆட்ரி ஹெப்பர்ன் என்ற பிரபல சினிமா நடிகையிடம் உள்ளத்தைப் பறி கொடுத்த 22 வயது மாணவருக்கு 6 மாத தண்டனையும் 250 பிராங் அபராதமும் காதல் பரிசாகக் கிடைத்த சம்பவம் பிரான்ஸில் நடைபெற்றது.

சென்ற கோடை விடுமுறையின்போது இவர் சுவிட்ஸர்லாந்துக்குப் போனார். அங்கு இந்த நட்சத்திரம் தங்கியிருந்த உல்லாச விடுதிக்குள் நுழைந்து, அவளது புகைப்படத்தையும் சில கடிதங்களையும், சில உடுப்புகளையும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். கோர்ட்டில் இதை அவர் ஒப்புக்கொண்டார். தனக்கு அந்த நடிகைமீது காதல் பைத்தியம் பிடித்துவிட்டதென்று விசாரணையின் போது சொன்னார்.

## நடிப்புக்கு பரிசுபெற்ற சிங்கம்

அமெரிக்க தயாள சிந்தையுடையோர் சங்கத்தாரால் வழங்கப்படுவது 'பாட்ஸி' என்னும் பரிசு. இச் சங்கத்தார் ஒவ்வொரு ஆண்டும் திரைப் படங்களில் நடிக்க வைக்கப் படும் சிறந்த விலங்குகளுக்குப் பரிசளித்துவருகிறார்கள். கடந்த ஆண்டு சிறந்த விலங்குக்கான பரிசை 'திவயன்' என்றபடத்தில் நடித்திருக்கும் 'ஸம்போ' என்னும் பெயருடைய சிங்கத்திக்கு கிடைத்துள்ளது.

இவ்வாண்டில் நடைபெற இருக்கும் போட்டியில் கலந்துகொண்டுள்ள அந்தப்படத்தில் நடித்திருக்கும் ஸம்பா 590 இறாத்தல் எடையுள்ளது. படத்தின் குளோசப் காட்சிகளில் மிகவும் பொறுமையோடு இருந்ததுடன் ஆபிரிக்கக் காட்டில வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கியபோது 12 வயது நடிகனை பமிலா பிரங்களினுடன் மிக அன்பாகவே நடந்துகொண்டது எதுவித அசம்பாவித நிகழ்ச்சியும் ஏற்படவில்லை.

## திலிப்குமார் கொலை?

பம்பாய்க்கு அருகில் உள்ள சிவாஜிபூங்காவில் திலிப்குமார் வைஜயந்திமாலா மற்றும் சில முக்கிய நடிகர்கள் சம்பந்தப் பட்ட படக்காட்சிகள் படமாக்கப்பட்டன. படப்பிடிப்பைக் காண ஏராளமானவர்கள் கூடிவிட்டார்கள். கூட்டம்அதிகமாக இருந்தும், திலிப்குமாரின் வேண்டுகோளின்படி எல்லோரும் அமைதியாக இருந்து படப்பிடிப்பைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் கூட்டத்திலிருந்த சிறுவன் ஒருவன் திடீரென திலிப்குமார் அருகில்ஓடிவந்தான். திலிப்குமார் அவனை மிரட்டி ஓரத்தில் போய் அமரும்படி கூறினார். சிறுவன் மிகுந்த பரபரப்புடன் "நான் வேடிக்கை பார்க்க இங்கேவரவில்லை. உங்களைக் கொலைசெய்யப் போவதாகச்சிலர் பேசிக்கொள்கிறார்கள்" அதைச்சொல்லவே ஓடிவந்தேன். என்றான். இதைக்கேட்ட திலிப் திகைப்படைந்தார். கோபத்துடன் கூட்டத்தைப்பார்த்து, 'யாரோ என்னைக் கொலைசெய்யப் போவதாகப் பேசிக்கொள்கிறார்களாம்' எதற்காக அப்படிப் பேசுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இப்போது எனது வேலை கெடுகிறது. வேலை முடியட்டும், பிறகு மற்றவற்றைக் கவனிக்கலாம் என்று சொல்லிவிட்டு படப்பிடிப்பு வேலையில் ஈடுபட்டார். இந்தத் தகவல் பொலிசார் வரை எட்டியது. கொஞ்ச நேரத்தில் பொலிஸ் கோஷ்டி ஒன்றும் அங்கே வந்துசேர்ந்தது. பொலிசார் வந்ததும் அதைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள். திலிப்குமார் தனனிடம் வந்த பையனைத் தேடினார். அவன் அங்கே காணப்படவில்லை.

இச்சம்பவம் 'லீடர்' என்ற ஹிந்திப்படத்தின் வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப்பட்டபோதே நடைபெற்றது.



இவர்களின் (ஜெமினி-தேவிகா) உல்லாசம் அவரின் (சரோஜாதேவி) வேதனைக்கு காரணமாக இருக்குமோ ஆடிப்பெருக்கில் ஒரு காட்சி.



அத்தான் என்னத்தைச் சொல்ல என்கிறாரோ தேவிகா. ஆடிப்பெருக்கில் தேவிகா - ஜெமினி.

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 25உ (7-4-63)


## தெய்வத்துக்கு வரி!

கொழும்புத்துறை மன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்திபிள்ளையாருக்கு புதிதாகப்பொருள் வரி, நிலவரி இவை விதிக்கப்பட்டுள்ளனவாம். மூன்றுவருடவரியையும் சேர்த்து, தொகையாகக் கட்டவேண்டுமென்று பிள்ளையாருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாயும், தர்மசாசனக் காணிகளின் வருமானம் கோவில் பூசைக்கே போதாதென்றும் கோவிற்காணிகளை விற்றே வரிகட்ட வேண்டிநேரிடுமென்றும் இதுபற்றிக் கோவிலைச் சேர்ந்த அன்பர்கள் கூடியோசித்துத் தக்கமுடிவு செய்யவேண்டுமென்றும் தர்மகர்த்தாக்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையை அன்பர் ஒருவர் நமக்கு அனுப்பிவைத்துள்ளார். இதேபோல் பல சமய கோவில்களுக்கும் புதியவரிவிதிக்கப்பட்டுள்ளது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனையும் கடித்ததாக ஒரு கதையுண்டு. அதேபோல மக்களுக்குப் பலபல வரிகள் போட்டுள்ள இந்த அரசாங்கம் முடிவில், கோவில் சுவாமிகளுக்கும் வரிவிதிக்கத் துணிந்தது விபரீதமாகும்.

முற் காலத்திலே தமிழ், சிங்கள மன்னர்கள் கோவில்களுக்கு மான்யங்களை அமோகமாகக் கொடுத்து, கோவில் பூசைகளும், தர்மங்களும் நன்கு நடைபெற உதவிவந்தார்கள். ஆனால் இப்போதோ, "பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதைப்பிடுங்குமாம் அனுமார்" என்ற வசனப்படி கோவில் பூசைக்குரிய காணிகளுக்கும் வரிவிதித்து மூன்றுவருட வரிகளையும் சேர்த்துக்கட்டும்படி அரசாங்கம் கோவில் சுவாமிகளிடமுள்ளதையே பிடுங்கமுன்வந்துவிட்டது!

வைகையாற்றில் பெருவெள்ளம் வந்து மதுரைநகருக்கு ஆபத்துஏற்பட்டபோது, பாண்டிய மன்னன், இந்த விபத்துஏற்பட வேண்டிய காரணத்தைப்பற்றி மந்திரிகளுடன் ஆராய்ந்தானும். கோவில்பூசைகள் சரிவர நடைபெறவில்லையோ, அல்லது பெரியோர் உள்ளம் எதுவும் நோகச் செய்தோமோ என்று கேட்டானும். அதாவது கோவில்பூசைகள் சரிவர நடைபெருவிடில், நாட்டுக்குப்பெரும் ஆபத்துக்கள் ஏற்படுமென்பது மக்கள் நம்பிக்கையாகும். ஏற்கெனவே, இலங்கையில் அமைதியில்லாமல் பலபல விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன. கோவில் பூசைகள் சரிவரநடைபெறமுடியாமலுள்ளதுதான் இதற்குக் காரணம் போலும். இந்நிலையில் கோவில்களுக்குப் புதியவரிகளைப்போட்டு, கோவில் காணிகளையே விற்கும்படி செய்வதாயின், இன்னும் என்னென்ன விபத்துக்கள் ஏற்படுமோ!

சைவக்கோவில்களுக்கு மட்டுமன்றி, பௌத்த கோவில்களுட்பட எல்லாமதஸ்தாபனங்களுக்கும் அரசாங்கம் பாரபட்சமின்றி . வரிகளைப்போட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்வரிகளைக் கட்ட முடியாமல் எவ்வளவு கோவில்கள் மூடப்படப் போகின்றனவோ இனித்தான் தெரியவேண்டும். ஏற்கெனவே கோவில் பூசகருக்கும் மற்றப்பணியாளருக்கும் மிகக்குறைந்த வேதனமே கொடுக்கப்படுகின்றது. வாழ்க்கைச் செலவுக்கே இது போதாது. புதியவரிகள் அமுலுக்கு வந்துவிட்டதால், இனி கோவிலில் பணி செய்பவர்களின் நிலைமை மிகமோசமடையவும் கூடும்

கோவில் வேண்டாம், சுவாமி இல்லை என்று சொல்லும் நாஸ்திகர்களுக்கு இந்த நடவடிக்கை மிக மகிழ்ச்சி அளிக்கலாம். கோவில் சொத்துக்களை எல்லாம் அடியோடு பறிமுதல் செய்ய வேண்டுமென்றும் கோவில்களை ஒழித்துவிட வேண்டுமென்றும் கூட அவர்கள் கூறலாம். ஆனால் இப்போதுள்ள அரசாங்கமோ, சமயங்களையும் சமயஸ்தாபனங்களையும் ஆதரிப்பதாக ஒருபுறம் கூறிக்கொண்டே மறுபுறம், கோவில்களை மூடும்படியான நடிவடிக்கை எடுக்கின்றது!

கடவுளுக்கும் இப்படி வரிபோட்டுள்ளது ஆஸ்திக மக்களுக்கு கவலை அளிக்கக்கூடிய நிலைமையாகும். எல்லாச் சமயமக்களும் ஒன்று சேர்ந்து இந்த வரியை எதிர்க்க இது நல்லதோர் சந்தர்ப்பம் இந்த ஆபத்தான நிலையில் தங்கள் ஆலய விஷயங்களில் அவர்கள் அதிக கவனமெடுக்கவும் வேண்டும். இவ்விதம் செய்வதாயின், இந்த ஆபத்து குறைவதுடன், ஆலயங்களுக்கும் இனி நல்லகாலம் பிறக்கவும் கூடும்.

---

இரத்தினக் கம்பளம்

# சுபசோபனம்

— 'நீலாம்பரி' —

சுபகிருது ஆண்டின் கடைசி ஞாயிறு இது. கவனமாகக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அந்த சுபகிருது ஆண்டு கடைசி ஞாயிற்றுக் கிழமை அதாவது சரியாக இன்னும் 60 ஆண்டுகளுக்குப் பிற்பாடு உள்ளமெனும் இந்த பொற் கம்பளத்தில் ஒருகோடி நல் முத்தைப்பரப்பிவைத்து கள்ளமிலா எண்ணக் கரங்களினுல் வொன்ருய் எடுத்துக் கோர்த்து வாராந்தம் மாலை கட்டி உங்கள் முன்வைக்கும் போது அதில் சந்திரமண்டலத்தில் நான் சேகரித்த செய்திக் குறிப்புகளை நீங்கள் நிச்சயம் படித்து மகிழ்வீர்கள். இங்கிலீஷ் கதை ஒன்றிலே வரும் பறக்கும் கம்பளம் மாதிரி இந்த இரத்தினக் கம்பளத்திலேயே நான் பறந்து சென்று சந்திர மண்டலத்தில்' நேர்முகமாகத் திரட்டிய புதினக் குறிப்புகளாகக் கூட அது இருக்கலாம். இன்னும் ஓர் ஐந்து பத்து ஆண்டுகள் தாமே, நீங்கள் பொறுமையுடன் காத்திருக்கமாட்டீர்களா என்ன? நீலாம்பரி சொக்கும் தமிழின் இனிமையைப் பருகுவதற்கு நானுயிருந்தால் கோடி ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருப்பேனே. அவ்வளவேன்? உங்கள் வீட்டில் புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தை கூட அதற்காகத் தானே பிறந்திருப்பது போல அழுகிறது. ஆகவே ஈழநாடு டயரியில் இன்றைய பக்கத்தைப் புரட்டி, (இதுவரைவாங்காமலிருந்தால் உடனே அதில் ஒன்றை வாங்கிக்கொள்ளுங்கள்) நான் சொல்லிய முன் அறிவித்தலை அதில் ஞாபகமாகக் குறித்துவைத்துக் கொள்ளுங்கள். அடுத்தவாரம் நாம் சந்திக்கும்போது சோபகிருது வருஷம் பிறந்துவிடும். புதுவருஷத்தில் மறைந்து போன பழைய ஆண்டுபற்றிப் பேசுவது அப்பொழுது நன்ருயிருக்காது. பழைய சுப வருஷத்துக் கதைகளுக்கு சுபமஸ்துக் கூறி விடைகொடுத்து அனுப்பிவிட்டு புதிய சோபன வருஷத்துக்கு நல்வரவு கூறி வரவேற்க வேண்டியதுகடமை. அது வழுவல; கால அமைதியின் பாற்பட்டதே என்க.

ஒரு காலத்தில் சூரியமண்டலத்திலிருந்து பூமிக்கு வந்த ஒளிக்கிரணங்கள் ஒவ்வொன்றிலும் சூர்ய குமாரர்களும் கூடவே வந்து பகல் முழு நேரமும் பூவுலகில் சஞ்சரித்து விட்டு சூரியாஸ்தமனத்தோடு திரும்பவும் அதேகிரணங்களில் தொட்டுக்கொண்டு சூரியமண்டலத்துக்குப் பத்திரமாகப் போய்ச்சேர்ந்துவிடுவார்களாம். இதுமாதிரி சந்திர மண்டலத்திலிருந்தும் சந்திரிகை என்று பெயருள்ள அழகான நிலவுக்கு கன்னியர் சந்திர கிரணங்களில் தொட்டுக்கொண்டு பூமிக்கு வருவார்களாம். பொழுது விடிந்து சூரியோதயம் ஆகுமுன்பாகவே இவர்களும் சந்திரமண்டலத்துக்குப் பறந்துபோய்விடுவார்கள்.

ஒரு காட்டில் பாரிய விருட்சமொன்றின் கிளையில் வானம்பாடி என்ற பறவை கட்டியிருந்த கூட்டில் பகல்வேளையில் சூர்யகுமாரர்களும், இரவில் நிலவுக் கன்னியரும் வந்து இவ்வாறு தங்கி உல்லாசம் கொண்டாடிப் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த வானம்பாடி அவர்கள் போனபிற்பாடு அவர்களை நினைத்துப்பகலிலும் இரவிலும் பாடிக்கொண்டிருந்தது. சூர்யகுமாரர்களைப் பற்றி அது இவ்வாறு பாடியதை சந்திரிகைக் கன்னியர் இரவில் கேட்டார்கள். நிலவுக் கன்னியரின் அழகை வியந்து அது பகலில் பாடியதை சூரிய குமாரர்கள் கேட்டு அதிசயித்தார்கள்.

"வானம்பாடி வானம்பாடி நீ யாரைப்பற்றிப் பாடுகிறுய்?" என்று சூரியகுமாரன் ஒருவன் ஒருநாள் வானம்பாடியிடம் கேட்டான். வானம்பாடி நிலவுக்கன்னியரை வர்ணித்தது.

"ஐயையோ, அவ்வளவு அதிசயமானவர்களா அவர்கள்?, ஒருத்தியைக்கூட நான் இதுவரை பார்த்ததில்லையே என்று ஏங்கினன் சூரியகுமாரன்.

. இப்படியே, நிலவுக்கன்னியரிலும் ஒருத்தி வானம்பாடியிடம் சூரிய குமாரர்களைப் பற்றிக் கேட்டுப் பொருமினள். அவ்வளவுதான். வானம்பாடி அந்தச் சூரிய குமாரனையும் நிலவுக் கன்னியையும் எப்படியும் ஒரு தினம் சந்திக்க வைத்து விடுவதென்று அவர்களுக்கு வாக்களித்து விடுகிறது

பொழுது கருக்கலாயிருந்த வேளை மிகவும் குறுகிய நேரத்துள் ஒருவரையொருவர் சந்தித்த சூரிய குமாரனும் சந்திரிகைக் கன்னியும் தங்களை மறந்து பேச்சில் லயித்துப் போய் காலம் தவறி அவரவர் மண்டலத்துக்குத் திரும்ப மாட்டாமல் தொடர்பு இழந்து பூலோகத்திலேயே தங்கி விட்டார்களாம்.

இந்த இரு ஒளித்துளிகளும் உயிர் வாழ வானம்பாடி ஒரு கற்பாறைத் துவாரத்தைக் காட்டியதாகவும், சூரிய குமாரனும் நிலவுக் கன்னியும் வாழ்ந்த அந்தக் கற்பாறை நாளடைவில் சந்திர காந்தக் கல்லாக மாறி உலகில் பெருமதிப்புப் பெற்றதென்றும் ஓர் அழகான கருத்தமைந்த கதை உண்டு.

பார்த்தீர்களா. ஒருகாலத்தில் சூரிய குமாரர்களும் சந்திர கன்னியரும் சூரிய, சந்திர மண்டலங்களிலிருந்து தினமும் பூமிக்கு வந்து போயிருக்கிருர்கள். அதுமாத்திரமல்ல, அவர்கள் பூமிக்கு வந்தபோது தான் அழகுணர்ச்சி கூடப் பெற்றிருக்கிருர்கள். அதற்கு மேல் 'இந்த உலகமே சொந்தமதானல் வானுலகேன் நமக்கு' என்று இங்கேயே தங்கி விட்டார்கள்

சூரிய குமாரர்களும் சந்திர கன்னியரும் இன்றைக்குப் பூமிக்குத்தினமும் வந்து போய்க்கொண்டு தானிருக்கிருர்கள். அவர்கள் அவ்வாறு வந்து போய்க் கொண்டிருப்பதனுல் தான் இரவும் பகலும் வெய்யிலும் நிலவுமென்று உலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அவர்கள் மண்டலங்களில் நமக்கு வேலை என்ன?

---

ஆழ்கடல் முதலாக ஆகாயம் வரை அளந்தறிய முற்பட்டிருக்கும் நவீன விஞ்ஞானம் பற்றிய இரு செய்திகள்.



ஆழக்கடலில் கப்பல்கள் போய்க் கொண்டிருக்கும் போது சமுத்திரத்தின் அடித்தரை மட்டம் கப்பலுக்கு எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்பதை அவ்வப்போது அறிவிக்கும்சமிக்ஞைகளை அனுப்பும் புதிய அணுசக்தி ஆழங்காட்டியின் தோற்றத்தைப் படத்தில் காண்க.



நமது உடலிலிருந்து வெளியேறும்வியர்வை, சிறுநீர் முதலான கழிவு திரவங்களை சுத்தமான குடிநீராக மாற்றுவதற்கு தொமஸ் குறூ என்ற அமெரிக்கர் ரசாயன இயல் வழியில் வெற்றிகரமான ஒரு கண்டு பிடிப்பைச் சாதித்திருக்கிருர். வருங்கால வானவெளி யாத்திரைகளில் இக்கருவி பயன்படுமென நம்புகிருர்கள்.

---

# விஞ்ஞானியும் வேதகுருவும் கண்டுபிடித்த பேருண்மைகள்

—வி. என். பி.—

**ஆதர் சி. கிளாக் ஒரு பிரபல விஞ்ஞானி. ரோயல் வானியல் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றவர். வானவெளி ஆராய்ச்சி நிபுணர். பல விஞ்ஞான நூல்களை எழுதியுள்ளார். அண்டவெளிப் பிரயாண ஆராய்ச்சிகள் எங்கு நடக்கிறதோ அங்கே கிளாக்கைக் காணலாம். தற்சமயம் இலங்கையில் வசிக்கும் இவர் கண்டு பிடித்த ஒரு பேருண்மை சென்றவாரப் பத்திரிகை ஒன்றில் வெளியானது.**

ஆதர் கிளாக் சொன்னுர்: மனிதன் ஒருநாளும் வான வெளியை வெல்லமுடியாது.

இதுதானு பேருண்மை? இது எங்களுக்குத் தெரியாதா? அரியும் அரனும் அடி முடி காண முடியாததை வேறு யார் கண்டு பிடிப்பார்கள்? என்று சிலர் கேலி செய்யக்கூடும், ஆனல் இந்த உண்மையை வெளியிட்டவர் வெறும் வைதீகப் பாட்டா அல்ல; உலகிலுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் அணு அணுவாய்ப் பிய்த்துப் பிரித்து ஆராய்ச்சிசெய்யும் ஒரு விஞ்ஞானி. விஷத

(12-ம் பக்கம் பார்க்க)

# உலகமேடை

டி. எம். எம்.

## பத்திரிகை வேலைநிறுத்தம்

உலகத்தின் மிகப்பெரும் நகரங்களில் ஒன்ருன நியூயோர்க்கிலும், அழகுமிக்க நகரமான பாரிசிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் உலகெங்கும் எதிரொலியைக் கிளப்பின. நியூயோர்க் வேலைநிறுத்தம், தனிப்பட்ட முதலாளிகளுக்கெதிரானது. பத்திரிகைகளின் சக்தி எத்தகையது என்பதை இந்த வேலைநிறுத்தம் வெளிப்படுத்தியது. பாரிஸ் வேலைநிறுத்தம்,அரசாங்கத்துக்கெதிரானது.

நியூயோர்க்கில் கடந்த 4 மாதங்களாக பத்திரிகை ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தம், சமீபத்தில் முடிவடைந்தது. ஆனல் இந்த 4 மாதங்களில் நியூயார்க் வாசிகள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல வாசகர்கள் மட்டுமின்றி, வர்த்தகத்துறையும் இதனல் பாதிக்கப்பட்டது.

"நியூயோர்க்டைம்ஸ்", "டெயிலி நியூஸ்", "ஜேர்னல் அமெரிக்கன்", "வேர்ல்ட் டெலிகிரும்" ஆகிய பத்திரிகைகளில் வேலைநிறுத்தம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து நகரிலுள்ள மற்றும் 5 தினசரிப்பத்திரிகைகள் அனுதாப வேலைநிறுத்தத்தை மேற்கொண்டன. ஒரு கோடி மக்களைக்கொண்ட ராட்சஸ நியூயோர்க் நகரில் செய்திப் பசிபிடித்த அமெரிக்கர்களை இது என்ன பாடுபடுத்தியிருக்கும் என யோசித்துப் பாருங்கள்.

வேலைநிறுத்தம் முடிவடைந்ததைத்தொடர்ந்து, "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகை, தனது முதல் இதழை 80 பக்கங்களைக் கொண்டு வெளியிட்டது. வேலைநிறுத்தம் நடந்த 4 மாதங்களில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏற்பட்டசம்பவங்களின் சுருக்கத்தை 12 பக்கங்களில் பிரசுரித்தது.

அச்சுக்கோர்ப்பவர்களுக்கான சம்பள உயர்வுக்கும், இதரசீர்திருத்தங்களுக்குமாக, எல்லாப்பத்திரிகைகளுக்கும் 20 கோடி டாலருக்குமேல் செலவாகிறது எனக் கூறப்பட்டது. அச்சுக்கோர்ப்பவர்களுக்கு மட்டும் வாரம் ஒன்றுக்கு 12 டாலருக்கு மேல் (சுமார் ரூ. 60) சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.வேலைநேரம் 36 மணியிலிருந்து 35 மணியாகக் குறைக்கப்பட்டது.

முதலாளிகளையும், ஊழியர்களையும் மட்டும் இந்த வேலைநிறுத்தம் பாதிக்கவில்லை. தியேட்டர்கள், புத்தகங்கள், இராக்கிளப்பு கலைஞர்கள், கலாலயங்கள் ஆகியனவும் பத்திரிகை விமர்சனம் இன்றி கடுமையாகப்பாதிக்கப்பட்டன. கடைகளில் சென்ற ஆண்டைவிட 10 சதவிகிதம் விற்பனைகள் குறைந்தன. வீட்டுவாடகை குறைந்தது. தரகர்கள் கமிஷன்களை இழந்தார்கள். பத்திரிகைகளை விற்காததன் காரணமாக மிட்டாய்க்கடைகள், மருந்துக்கடைகள் முதலியன பாரதூரமாகப்பாதிக்கப்பட்டன.

அமெரிக்கா, முதலாளித்துவ சாம்ராஜ்யம் மட்டுமல்ல. பத்திரிகை சாம்ராஜ்யம் என்பதையும் இந்த விபரங்கள் புலப்படுத்துகின்றன. மேல்நாடுகளில் பத்திரிகை படிப்பவர்கள் அதிகம். விளம்பரதாரர்கள், விளம்பரம் விரும்பிகள் ஆகியோரும் அதிகம். நமது நாடுகளைப் போலன்றி, தினசரி 40 லட்சம் முதல் 60 லட்சம் வரை விற்பனையாகும் பெரிய பத்திரிகைகள் பல அங்குண்டு. எனவே இந்த பத்திரிகைகள் "வாளைவிட வலிமையுள்ளது பேனா" என்ற நெப்போலியனின் கூற்றை மெய்ப்பிக்கின்றன அல்லவா?

★

## வேலை நிறுத்தம் இலக்கம் 2

அதேநெப்போலியனின் தலைநகராய் இருந்தபாரிஸ் மாநகரில், மற்றொரு வேலைநிறுத்தம் நடைபெற்றது. நெப்போலியனின் பெருமையை அடைய விரும்பும் டிகாலுக்கெதிராக, 2 1/2 லட்சம் சுரங்கத்தொழிலாளர்கள் 5 வாரம் வேலைநிறுத்தம் செய்தபின்,

இந்த வேலைநிறுத்தமும் குறைந்த வேலைநேரம், அதிகச் சம்பளம் என்ற அடிப்படைக் கோரிக்கைகளைக் கொண்டதுதான். நாளுக்கு நாள் பரவிவரும் வேலைநிறுத்தத்திற்காதரவாக அடையாள வேலைநிறுத்தங்களும், அனுதாப வேலைநிறுத்தங்களும் திடீர்திடீரென ஏற்பட்டு வந்தன. கடைசியாக பஸ் ஊழியர்கள் அங்கு வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். வேலைநிறுத்தம் செய்த காஸ் தொழிலாளர், மின்சாரத் தொழிலாளர் ஆகியோரும் சம்பள உயர்வுக்காக வேலைநிறுத்தம் செய்தனர். சமரசம் ஏற்பட்டால் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யப்போவதாய் அவர்கள் பயமுறுத்தியுள்ளனர்.

சுரங்கத் தொழிலாளரும், அரசாங்கமும் புதிதாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராய் இருப்பதாக அறிவித்தன. ஆனல் முதலில் அரசாங்கம் தான் இதற்கு வழிவகுக்க வேண்டுமெனத் தொழிலாளர்களும், அதேபோல் அரசாங்கமும் பிடிவாதம் காட்டிவந்தது. அல்ஜீரியாவையும், ஐரோப்பிய பொதுச்சந்தையையும், அமெரிக்காவையும் ஒரு கைபார்த்த டிகால், சட்டவிரோதமாக்கப்பட்ட இந்த வேலைநிறுத்தத்தையும் அரைகுறை வெற்றியுடன் சமாளித்திருக்கிருர். அவர் வணங்காமுடி மன்னன் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

உற்பத்தி பெருக, செல்வம் அதிகரிக்கிறது. வாழ்க்கை வசதிகள் பெருக, தேவைகள் அதிகரிக்கின்றன. இதன் முடிவில்லாப் போராட்டமே வேலைநிறுத்தங்களாகும். எல்லாம், குறைந்த வேலை–அதிக சம்பளம் என்ற அடிப்படையிலேயே முடிகின்றன.

★

## கவியரசி சரோஜினி

கவியரசி சரோஜினிதேவியின் பிறந்த தினத்தை ஒவ்வொரு வருடமும் அகில இந்திய மாதர் தினமாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாய், மந்திரி லக்ஷ்மி மேனன் அறிவித்திருக்கிருர். "கீழ்நாட்டின் கவிக்குயில்" என்றும், "கோகிலம்" என்றும் மேல்நாட்டார் போற்றிய ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, இந்தியா ஈன்றெடுத்த தவப் புதல்விகளில் ஒருவர். காந்திஜியின் சுதந்திரப் போராட்டத்தில் அவர், நேருஜி, ஸர்தார்ஜி, ராஜாஜி, மௌலானு அஸாத், சுபாஷ் போஸ் போன்ற பெருந்தலைவர்களுடன் சம அந்தஸ்தை வகித்தவர்.

ஆங்கிலத்தில் அவரது கவிதைகள் மேல்நாடுகளையும் தொட்டன. தமிழுக்கு ஒரு பாரதி, வங்கமொழிக்கு ஒரு தாகூர் — அதேபோல் ஆங்கிலக்கவிதையில் சரோஜினி இணையற்று விளங்கினுர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில், ஸ்ரீமதி நாயுடு பெண்குலத்தின் முன்னணித் தலைவியாக மட்டுமின்றி, ஆண்குலத்தின் தலைவியாகவும் வழிகாட்டியிருக்கிருர். ஸ்ரீமதி அன்னி பெஸன்டைப் போலவே, அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபைத் தலைவராகவும், தொடர்ந்து காரியக்கமிட்டி அங்கத்தினராகவும் இருந்தார். பன்முறை சிறை சென்ற ஸ்ரீமதி நாயுடு, அமெரிக்காவில் சூருவளிச் சுற்றுப்பிரயாணம் செய்து இந்திய சுதந்திரம் பற்றி நிகழ்த்திய அற்புத சொற்பொழிவுகள் இன்னும் பலர் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும். 1930-ம் ஆண்டு காந்தி மகாத்மா, லண்டன் வட்டமேசை மகாநாட்டுக் சென்றிருந்தபோது பண்டித மதன்மோகன மாளவியா, ஸ்ரீமதி சரோஜினிநாயுடு ஆகியோரும் அவருடன் சென்றிருந்தனர்.

ஸ்ரீமதி சரோஜினி, ஹாஸ்ய உணர்ச்சிபடைத்தவர். ஹாஸ்ய உணர்ச்சிமிக்க ஆச்சார்யா கிருபாளினி, மகாத்மா காந்தியின் மடியில் படுத்து விளையாடுவார். சரோஜினி நாயுடு, காந்திஜியை "மிக்கி மவுஸ்" என்று அழைப்பார். காந்திஜியின் உருவத்தை வால்ட்டிஸ்னியின், "மிக்கி மவுஸாக" வருணித்து அவர் கேலிசெய்வதுண்டு. காந்திஜி அதைக் கேட்டுப் புன்னகை புரிவார்.

ஸ்ரீமதி சரோஜினி வங்காளத்தின் புதல்வியாகும். ஆனல் ஹைதராபாத்தில் மணம் வாழ்ந்து புகழ் பெற்ற சரோஜினியின் குடும்பம், நேரு குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடையது. ஸ்ரீமதி நாயுடுவின் சகோதரர் ஸ்ரீ ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாய, இன்று இந்தியாவிலேயே தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்; பெரிய எழுத்தாளர். ஸ்ரீமதி நாயுடு கவர்னர் பதவியை வகித்ததுபோல், அவரது புதல்வி ஸ்ரீமதி பத்மஜா நாயுடு இப்போது மேற்கு வங்க கவர்னராய் இருக்கிருர்.

ஒருமுறை, ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது அவர் தங்கியிருந்த பிரம்மாண்டமான ராஷ்டிரபதி பவனத்தை ஸ்ரீமதி சரோஜினிக்குச் சுற்றிக்காட்டினர். உருவத்தில் சிறிய தனக்கு, அதுவும் தனி மனிதனுக்கு எவ்வளவு பெரிய படுக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என ராஜாஜி, சரோஜினிக்கு காட்டினர். அதற்கு கவியரசி சொன்னர்; "ராஜாஜி— உங்களுடன் எல்லா விஷயத்திலும் நான் ஒத்துழைக்கத் தயார். ஆனல் இந்த ஒருவிஷயத்தில் மட்டும் என் உதவியைக் கோராதீர்கள்" என்ருர் சிரித்துக்கொண்டே. ராஜாஜியும் இந்த ஹாஸ்யத்தை நன்கு ரசித்தார்.

ஹாஸ்ய உணர்ச்சியும், கவிதைத் திறனும், தியாகசேவையும், ஆற்றலும், அரசியல் திறமையும் மிக்க சரோஜினிதேவியின் பிறந்த தினத்தை அகில இந்திய மாதர் தினமாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

## பூஜ்யம் தபால்

### திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸ் தலைவர், கொழும்பு.

தலைவரே!

வாணவெடிகளுடனே தாங்கள் சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் பொதுமேடையில் தோன்றிச் செய்த பிரசங்கம், இங்கு அரசியல் அரங்கிலே புதிய கலகலப்பை ஏற்படுத்திவிட்டது. மூன்று வருடகாலமாக அரசியல் அஞ்ஞாதவாசம் செய்தீர்கள். இதனல் தங்களுக்கு நஷ்டத்தைவிட அதிக லாபமே என்று கேள்விப்பட்டேன். இரு பொதுத்தேர்தல்களில் தாங்கள் வெற்றிபெறமுடியாமற்போனது எனக்கு வருத்தம்தான். என்ருலும் நடப்பதெல்லால் நன்மைக்குத்தானே!

வட்டமேசை மகாநாடு கூட்டவேண்டுமென்று தாங்கள் கூறும்யோசனைக்கு இப்போது அதிக ஆதரவு கிடைத்துவருவதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது. தமிழரசுக்கட்சிகூட வட்டமேசை மகாநாட்டை எதிர்க்கவில்லை. அதற்குவருமாறு அழைக்கப்பட்டால் அதில் தாங்களும் கலந்துகொண்டு, அது வெற்றி பெறுவதற்குத் தங்களாலான ஒத்துழைப்பை நல்குவதாகவும், அதுவரை சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்திவைக்கவும் தயாரென்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை பிரிந்துள்ள தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேருவதாயின், அதனல்தமிழ்ப் பேசும் சமூகத்துக்கே பெரிய பலமும் உற்சாகமும் ஏற்படும். மற்றவர்களும் இதை மதித்து, தமிழரின் நியாயமான கோரிக்கைக்கு இணங்கவும் கூடும்.

ஆனல் அரசாங்கக் கட்சியினர் இதுவரை இதுபற்றி வாயே திறக்கவில்லை. அரசியல் அதிகாரம் அவர்கள் கையிலதானே உள்ளது. வட்டமேசை மகாநாடு யோசனையை அவர்களும் மனதிற்குள் ஆதரிப்பினும்கூட, இதனல் அடுத்த பொதுத்தேர்தலில், தங்கள் கட்சிக்கு பல வீனமேற்படுமே என்றும், யு. என். பி.யின் கை ஓங்கிவிடுமே என்றும் அஞ்சி, இந்த யோசனையைத் தட்டிக்கழித்து விடலாமென்று சொல்லப்படுகின்றது.

இது எப்படியாயினும், தாங்கள்தேசிய ஒற்றுமையுடன், தமிழரிடையேஒற்றுமை ஏற்படவும் செய்ய முன்வரின் அதனல் எவ்வளவோ நன்மை ஏற்பட முடியுமென்றே நம்புகிறேன்.

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு:

தாங்கள் மீண்டும் அரசியலில் குதித்துவிட்டதால், அடுத்த தேர்தலில் தாங்களும், தங்கள் கட்சியினரும் போட்டியிட முன்வந்துவிடுவீர்களோ என்ற பீதியே, தமிழ்த்தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்பட முடியாமல் தடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தப் பார்லிமெண்டிலே தாங்கள் பழம் தின்று கொட்டைபோட்டவர்கள். மெஜாரிட்டி சமூக ஆட்சியே, ஜனநாயகத்தின் பெயரால் நடைபெறுவதைத் தாங்கள் அறிவீர்கள். சேர் ஜானின் மந்திரிசபையில் சேர்ந்து தாங்கள் ஒத்துழைக்க முன்வந்தும்கூட, தங்களை அவர்கள் எப்படி நடத்தினரென்பதை இன்னும் மறக்க முடியவில்லை. ஆகவே பழைய பார்லிமெண்ட் சபையை, சில காலம் பகிஷ்கரித்துவிட்டால் என்ன நஷ்டம்? தமிழ் பேசும் மக்களின் நிலை மிக மோசமாக இருப்பதால், அவர்களை ஒற்றுமைப்படுத்தி ஆக்க முறையில் பல காரியங்கள் செய்தால் நல்ல பலன் உண்டென்று சில அன்பர்கள் கூறுகின்றனர். தங்கள் கருத்து என்னவோ?

"பூ"

## மலை ஆராய்ச்சி

பான், ஏப். 6

இந்துகுஷ் மலைத் தொடரைச் சேர்ந்த கவ்யா முகம்மது மலைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்காக விஞ்ஞானிகள் மலையேறும் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கோஷ்டி மேற்கு ஜெர்மனியிலிருந்து இந்த வருடக்கோடையில் ஆப்கனிஸ்தானுக்கு வந்து சேரும். இந்த கோஷ்டிக்கு நில உட்கூறு ஆராய்ச்சி நிபுணரான 29 வயது உறில்தே பிராண்ட் தலைவர்.

—

ராஜ்கோட், ஏப். 6

குஜராத் ராஜ்ய கடற்கரை ஓரப் பகுதிகளில் கிடைக்கும் "பும்புலா" மீன் எனப்படும் தனிரக மீன், மாஸ்கோவில் நடைபெற இருக்கும் சர்வதேசக் கண் காட்சிக்கு அனுப்பப்படும் என்று தெரிய வருகிறது.

## ஆஸ்திரேலியாவில் மதுவிலக்கு பிரசாரம்.

மெல்போர்ன், ஏப். 6

ஆஸ்திரேலியாவில் கையாளப்படும் மதுவிலக்குப் பிரசார முறைகளை அறிந்து, அந்த முறைகளை இந்தியாவிலும் பின்பற்றுவது சம்பந்தமாக ஆராய மிஸ்மிர்டல் சாலமன் என்னும் இந்தியப் பெண் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளார்.

இவர் ஆஸ்திரேலியாவில் 3 மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்வார். மிஸ் சாலமன் கிறிஸ்தவ பெண்கள் சங்கத்தினரால் சமீபத்தில் டெல்லியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மதுவிலக்கு பிரசார நிலையத்தின் டைரக்டர்.

"இந்தியாவில் குடிப்பழக்கமானது ஆஸ்திரேலியாவில் உள்ளதைப் போல அளவுக்கு இல்லை. இந்தியா பூராவிலும் பூரண மதுவிலக்கு அமுலாகும் நாளை நான் எதிர்பார்க்கிறேன். இந்தியாவுக்கு வரும் விருந்தினர்களுக்காக வெளிநாடுகளிலிருந்து மதுவகைகளை இறக்குமதி செய்வதும் கூட தடுக்கப்படவேண்டும் என்பது என் கருத்தாகும்" என்று அவர் கூறினர்.

—

## 64-வது அணுகுண்டு பரீட்சை
### அமெரிக்கா நடத்தியது

வாஷிங்டன், ஏப். 5

அமெரிக்கா நேற்று நெவாடா பாலைவனத்தில் அணுகுண்டு பரிசோதனை யொன்றை நடத்தியது.

இது அமெரிக்காவின் 64வது அணு ஆயுத பரீட்சை.

# கணேசர் ஆலயங்கள்

— "இளங்கோ" —

முன்னர், பூர்வீகத்திலே, மாருதப் புரவீக வல்லி என்னும் சோழ அரசிளம் கன்னிகை, தனது குதிரைமுகம், குஷ்டம் ஆதியன மாறி மனித முகம் பெற, பல கணேசர் கந்தசாமி கோவில்களை ஆக்கினள். இவை அம்மாதின் கர்ம நோய் நீங்க பிராயச்சித்தமாக எழுந்தவையே. முதலிலே, மாவை, மயிலை, இணுவை, மஞ்சவனம், முல்லை, ஆதியாம் முருகன் தலங்களை ஆக்கினள். கணேசர் கனவிலே தோன்றி, "என்னை மறந்து நீ முருகனை வணங்கினமையினாலே, உனது கர்மவியாதி, குதிரைமுகம் ஆதியன பிறர்கண்களுக்கு தெரியாதே, ஒழிய உனக்கு அவை தெரிந்தே ஆகும்!" எனத் திருவாய்மலர்ந்து அருளினர்.

பின்னர் தனது அரைகுறை வியாதியை நீக்க, அம்மங்கை வடக்கே கொல்லங் கலட்டி தொடக்கம் தெற்கே கல்வளை விநாயகர் வரை ஏழு விநாயகர் கோவில்களை ஒரேவரிசையிலே ஆக்கி வழிபாடு செய்தாள். அந்த ஏழு தலங்களும் கொல்லங்கலட்டி, வறுத்தலை, அழகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவாம்.

இதன்பின்னர் ஈழத்திலே அரசோச்சிய குளக்கோட்டன், விவசாயிகளுடைய பக்திப்பெருக்கத்திற்காக இவற்றைத் திருப்பணிவேலைகளாக அமைத்தான். இவனே! திருமலைக் கோணநாதர் கோவிலைக் கட்டி முடித்தவன் என்பது எல்லோருடைய பெரும் நம்பிக்கை. வடஈழநாட்டுக் கணேசர் கோவில்கள் மிகவும் மூர்த்திகரம் நிறைந்தன. மாணியம்பதி மருதடியான் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

"சீருற்ற வண்டலைத்
தண்டலையு மண்டுபுனல்
செறியுமென்மலர் வாவியுஞ்
செந்நெல்விளை கழனியு
மன்னி நிலைபெற்றிடுந்
திருவளவையம்பதிலே
சாருற்ற நிதிதழியணி
படமுமிளர்ந்
சசியன்ன வொருமருப்புந்
திழை செவியிரண்டுமுக்
கண்ணு நால்வாயோடு
தயங்குமைங் கரமுதலாய்
ஏருற்ற வங்கத்தின்
அழகதனை எப்பொழுதும்
இதயமிசை வைக்குடியேன்
இச்சைகொடு நின்பாத
மலர் தில்க் கொண்டிசைத்திடு
தொடையை ஏற்றுருவாய்
வாருற் பலவணியும்
நேருற்றகும்பழவளையில்
அருள் விளைவினுடனே!
வந்தமத தந்திமுக
வெங்கை பரமானந்த
மாவிக்னேசுவரனே!

என வரும் பாடல் அளவை கும்பழாவளைபெருமானுருடைய பெருமையை உணர்த்துகின்றது. சற்பொழுது இராஜகோபுரம் விளங்க ஆலயம்பொலிந்துவிளங்குகின்றது. ஆகவே கும்பழாவளைப் பெருமானர் எம்மை ஆக்குவார்! இத்தலத்திலேயே, மாருதப்புரவீக வல்லியின் — கர்மம் தொலைந்தது. இதன் பெயரிலே கோவில் அருகாமையிலே மாவிழுதிட்டி என ஒரு இடம் பெயர் வழங்கிவருகின்றது. குதிரைமுகம் மாறியபின்னர் பெருமாக்கடவை எனும் இடத்திலே எம்பெருமானை ஆக்கி வழிபாடு செய்தார். இறுதியாக அமைத்த கோவில் சன்டிருப்பாய் கல்வளை விநாயகா கோவில் என்பது வெள்ளிடமலை. இதன் பெருமையும், நல்லருளும் இந்த ஊரிலே வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் எமக்குக் கல்வளை அந்தாதி மூலம் காட்டிப் போந்தார்.

புலவர் பெருமானுர் நல்லை நகரிலே வாழ்ந்தாராயினும், 'பெற்ற தாயும்,பிறந்தபொன்னாடும், நற்றவவானிலும், நனிசிறந்தனவே!" என்பதற்கிசைய இத்தலத்திலே எழுந்தருளிய கல்வளை விநாயகனர், தல அழகு, என்பவற்றை படிப்போர் பக்தி பெருகும் வண்ணம் எமக்கு அருளித்திருக்கின்றார். புலவர் பெருமானுலே எமக்குக் கூறப்பெற்ற கொன்றை மரம் திருக்குளம் என்பன இத் தலத்திலே இப்பொழுதும் சாணத்தான் செய்கின்றன. காணிகளும் நிறைந்தே இருக்கின்றன. முன்னர் கும்பழாவளைப் பதிகப் பாடலிலே, பரமானந்த விநயகரே! என வருதலைக் காண்க.

# சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார்

— இ. சர்வானந்தன் —

இலங்கையின் சரித்திர சம்பந்தமான சில கிராமங்களின் நாகரிகத்தையும், அவற்றின் சரித்திரத்தையும் பற்றி ஆராய்வது மிக முக்கியமாகும். இப்பேற்பட்ட விஷயங்களில் ஈடுபடுவது ஒவ்வோரிளைஞனின் கடமையாகும். சரித்திரப் பெருமைவாய்ந்த இவ்விலங்கையில் சில ஆலயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்றுசித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையாராலயமாகும்.

இக்கோவில் 18-ம் நூற்றுண்டில் கட்டப்பட்டது. இத்தேவாலயம் சித்தன்கேணி மக்களின் அதிபிரயாசையாலும் ஒருங்கு மனப்பான்மையாலும் கட்டப்பெற்று பக்திவணக்கத்துடன் வழிபட்டுவரலாயிற்று.புராதன காலந்தொட்டு இன்றுவரை இந்துக்கள் பலபாகங்களிலிருந்தும் இக்கோவிலிற்குவந்து வழிபட்டுச்செல்வர். இக்கோவிலில் 1959-ம் அண்டு பல திருத்தங்கள் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் முப்பத்துமூன்று ஓமகுண்டங்கள் கொண்ட அபிஷேகம் நாற்பத்தைந்து நாட்கள்வரை பன்னிருதிருமுறைகளும் ஓதப்பட்டு அதிசிறப்பாக நடைபெற்றது. இக்கோவில் சிறப்பாக நடைபெறுவதற்கு பல பெரியார்கள் பாடுபட்டுவந்தனர். இவர்களுள்சித்தன்கேணி வாசியான திரு. அம்பலவாண நாவலரும் ஒருவராவர். இவர் தனது சொத்துக்கள் யாவற்றையும் தான் இறக்கும்போது இத்தேவாலயத்துக்கு அர்ப்பணம் செய்துள்ளார்.

கோவிலின் கோபுரம் அதிக சித்திரப்பாடமைந்த பல உருவங்களாலானது. இக்கோபுரத்தின் முன்னர் ஓர் மண்டபமும் உண்டு. இக்கோவிலின் உள்

(11-ம் பக்கம் பார்க்க)

இதே போல, சின்னத்தம்பிப் புலவர் பெருமானுரும் சற்பகமே (கேட்டதைக் கொடுப்பது) பரமானந்தா, எனப் பக்திப் பரவசத்திலே கூறிப் போந்தார். பரமானந்த விநாயகனுரைப்போல் நீ ஓர் அன்பர், பாடிய பாடலைக் காண்க.

"சீர் மேவும் சண்டிருப்பாய்
சேர் நற்கல்வளைப் பதிமேவும்
பார் ஏற்றும் பழனஞ்சூழ்
பரமானந்தன் பதம் போற்ற
ஏர்ஓங்கும்! ஆழில்!அருள்
தாளேங்கும்! சீரோங்கும்!
நீர் மேவும் நிமலனருள்
நிறையுமாமே!"

## ஆஸ்திரேலியப்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கிரிப என்ற இந்த விதவைப் பெண்ணின் உருக்கமான வேண்டுகோளை நிறை வேற்ற அப்பெண்ணுக்காக சிட்னி பத்திரிகை வாதாடியது. இரு நாட்டு அதிகாரிகளிடையேயும் கடிதங்கள் பறந்தன. ஆஸ்திரேலிய அரசாங்கத்தில் உயரிட ஆலோசனைகள் நடந்தன. கடைசியில் இந்த விதவையின் பந்தபாசம் வென்றது. அப்பெண் தாய் தந்தையர் வாழ்ந்த இடத்திலிருந்து எடுக்கபபட்ட மண் ஒரு ஜாடியில் வைக்கப்பட்டு சால ஜாக்கிரதையுடன் அப்பெண்ணிடம் சேர்க்கபபட ஏற்பாடாகியிருக்கிறது.

எல்சி கிரிபின் காலஞ்சென்ற பெற்றோர்கள் பிரிட்டனில் உள்ள பார்மிங் ஹாமில் வசித்தனர். அவர்கள் வாழ்ந்த இடத்தைக் காணவேண்டுமென்பது எல்சிகிரிபபின் நீண்டநாள் ஆசையாகும். ஆனல் அந்த விதவைக்கு அதற்குரிய வசதிகள் இல்லாததால் காலஞ்சென்ற தனது தகப்பனர் போற்றிப் பாதுகாத்த தோட்டத்திலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து அனுப்புமாறு பிரிட்டனைச் சேர்ந்த பர்மிங்ஹாம் நகர மேயருக்கு எல்சி கிரிப் எழுதினர். அதற்கு அந் நகர மேயர் இசைந்தார். அதன் பின்னர்தான மேற்கூறியவாறு அரசாங்க கட்டு திட்டங்களை குறுக்கிட்டன. தொற்றுநோய்த் தடுப்பு விதிகளே இதற்குக் காரணம்.

அதன் பின்னர் இதுபற்றி கடிதப் போக்குவரத்துகளும், உயரிட ஆலோசனைகளும் நடந்து இந்த மண்ணை ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டது. சீலிட்ட ஜாடியில் பிரிட்டனிலிருந்து அனுப்பப்படும் இந்த வெறும் மண் கான்பெரா ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் கிருமிகள் இல்லாதபடி நீராவிமூலம் சுத்தம் செய்யப்பட்டுஅதன பிறகே எல்சிகிரிப்பிடம் ஒப்படைக்கப்படும்.

தனது கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதை அறிந்த எல்சிகிரிப் பெரும் மகிழ்ச்சியடைந்தார்! "இது அற்புதமான செய்தி. எனது ஆசை நிறைவேறிவிட்டது" என்று ஆனந்தம் பொங்க கூறினர் அந்த வியோதிக விதவை.




குடும்பங்கள் கூடி மகிழும்போது...




குதூகலமும் திருப்தியும் நிலவுகிறது. அன்புக்கும் உறவுக்கும் பாத்திரமானவர்கள் மத்தியில் சீராட்டிப் பாராட்டி மகிழும் பண்பும் பரிமளிப்பும் பொங்கி வழிகிறது.

இத்தகைய மனோகரமான வேளைகளில், உங்களைச் சுற்றி அமர்ந்திருக்கும் விருந்தினருக்கு மகிழ்வூட்டுவது வில்லியம்ஸ் பிஸ்கட்டுகளின் தனிச்சுவை. மதுரமான உருசியூட்டி முறுமுறவென்று நாவிற் கரைந்து தித்திக்கும் புது வாசனைப் பொலிவுள்ள வகை வகையான பிஸ்கட்டுகள், இலங்கையின் தொழில் விருத்தித்துறையில் உங்களுக்கும் பெருமையும் நம்பிக்கையும் தரும் பிஸ்கட்டுகள் இவையே.

சிறந்ததையே பரிமாறுங்கள்... வில்லியம்ஸ் பரிமாறுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஏகவிநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பங்குனிப் பொங்கல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்கள் கேலிசெய்தார்கள்.

"உனக்கென்னடா மச்சான். பிற ஊரிலே சம்பந்தம்.... நல்ல சீதனம்... நல்ல இடமாம்... பிறகென்ன...!"

பிறகென்ன...?

கேள்வி நீள்கின்றது.

துருவிய தேங்காய்ப்பூவைத் தண்ணீருக்குள் கொட்டிப் பிழிந்தேன். கரத்தில் பூக்கள் ஒட்டிப்பிடிக்கின்றன. வெண்மையின் மத்தியில் வெண்மை நிறைகின்றது.

கரிபடிந்த அவளின் பாதங்கள்! பாதங்களுக்குச் சற்று மேலே புதிய புடவையின் சரிகையிட்ட கரை விறகின் ஜுவாலையில் ஒண்மையாய்த் திகழ்கின்றது.

தேங்காய்ப்பூ பாலாகிறது.

என்னுள்ளத்தை யார் கசக்கிப் பிழிகின்ருர்கள்?

புரோகிதர் ஓமத்தீ வளர்க்கின்ருர். நெய் மணத்துடன் சுள்ளிகளின் சுகந்தமும் என் நாசியைத் துளைக்கின்றது. கண்கள் புகையால் கலங்குகின்றன. பெருவிரலால் வழித்து என் புதுவேட்டியில் துடைக்கின்றேன்.

என் நண்பன் என்னை நோக்கிப் புன்னகை புரிகின்ருன். கூட்டத்தினைத் துழாவுகின்றன கண்கள். தாயார் பெண்களின் மத்தியில் மங்களத்தின் சின்னமான வெற்றிலைத்தட்டை நீட்டுகின்ருள். ஒவ்வொருவர் முன்பும் நீட்டும்போதும் அகரங்கள் ஒருமுறை ஆடியசைகின்றன. அப்புன்னகையைத்தான் இவ்வளவு காலமும் காத்திருந்தேன்.

முகத்திரையிட்டு அவள்- நான் தாலிகட்ட இருப்பவள்- பெண்கள் புடைசூழ வருகின்ருள். என் பார்வை நிலத்தில் விழுகின்றது. பாதங்களை நோக்கி ரசிக்கின்றேன். அவை தடுமாறித் தடுமாறி ஒவ்வொரு அடிகளாக எடுத்துவைக்கின்றன. என்னருகில் வந்தமர்கின்ருள். என் கரத்துடன் அவளின் சரிகைச்சேலை உராய்கின்றது. புதுச்சீலையின் சுகந்தம் என்னை மயக்குகின்றது. மெல்ல மெல்ல என் பார்வையைத் திருப்பி - மேலே தொங்கும் அலங்காரமணிகளை நோக்குவது போன்று முகத்தின் திரைச் சீலைக்கூடே அவளின் முகத்தை - நயனங்களை - அதரத்தை நோக்குகின்றேன்.

ஓமத்தீ வளர்க்கவிட்ட சுள்ளிகள் மேல் நீர் பட்டதும் புகையெழுகின்றது. என்னுள்ளத்திலும் அவை பரவுகின்றன.

படத்திலுள்ள அதே விழிகளா...? அதரங்கள் கருமையேறி - அவலட்சணமாய்...

என் சிரசைக் குனிந்து நெற்றியை என் புறங்கையால் உராய்கின்றேன். உராயும் சூட்டுடன் என்னுள்ளத்தின் வெம்மையும் ஒன்ருகக் கலக்கின்றது.

அன்னை என்னைப் பரிதாபமாக நோக்குகின்ருள். அந் நோக்கில் என்னிடம் எத்தனை கெஞ்சுதல்? என்னருகில் தாயார் வந்து காதுடன் காதாக...

"என்ரை மானத்தைக் காப்பாத்தடா தம்பி, நடந்தது நடந்துபோச்சு... எப்பிடியும் தாலியைக் கட்டு..."

கல்யாணவீட்டுக்கு வந்தோர் எம்மை 'ஒருமாதிரி' நோக்குகின்றனர்.

தாயாரின் சொல்லைக் கேட்கவா?

என்னை ஏமாற்றிவிட்டார்களென்று கல்யாணத்தைக் குழப்பவா?

போரின் மத்தியில் தாயாரின் வார்த்தைகள் வெற்றிச் சங்கநாதமிடுகின்றன. தாலியைக் கட்டுகின்றேன்.

முதலிரவு—

அவள் என் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து - எழுகின்ருள்...

இருபத்தேழு வருடமாக அவள் கழித்த நாட்கள்...? அதற்குள் ஐந்து கல்யாணங்கள் பேசித் தடைப்பட்டபின் என்னை ஏமாற்றியென்ருலும் மணக்க வேண்டுமென்பதற்காக அவள் தங்கையின் படத்தை யளித்து என்னை ஏமாற்றிவிட்டார்கள்.

கிரியேறும் பொங்கற்பானையையும், அவளையும் ஒப்பு நோக்குகின்றேன். எனக்கு வேண்டியது —செம்பு நிறம். கரி நிறமில்லை.

ஏப்பமாய் அடி உள்ளத்திலிருந்து பழையன எழுகின்றன.

ஒரு நாளென்ருலும் இன்பத்தை என்னிடமிருந்து பெற்றிருப்பாளா? எத்தனை பேச்சுக்கள்...? என் ஆத்திரத்திலிருந்தெழும் கிண்டலும், குத்தலும் எத்தனை... எத்தனை?

பார்வதியும் கண்ணனும் ஒளி வட்டமிடுகின்றனர். கருமை நிறமுடைய கடவுளர்கள்... இவள் நிறம்? இதற்காகத்தானே புறக்கணிக்கின்றேன்...?

'அழகே உண்மை... உண்மையே அழகு' கீட்ஸினது வார்த்தைகள் நெஞ்சில் நிறைகின்றன.

'அழகே உண்மை'... எனக்கு வேண்டியது அழகு... விவாகரத்துச் செய்தென்ருலும் என்னை ஏமாற்றியவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்து...'

பானையில் பொங்கி வழிகிறது நீர். விறகு நனைந்து எழும் புகைக்கூடே அவள் தன் உடலையிட்டு நீரை அள்ளியள்ளி வெளியே ஊற்றுகின்ருள்.

நான் எழுந்து செல்கிறேன். சுடுநீர் என்மீது தெறிக்கின்றது. என் குருதியும் சுட... அதரமும் துடிக்கின்றது.

"பார்த்துச் செய்யக்கூடாது ... புருஷனென்று மதிப்பில்லை... நான் பார்த்து என்மேலே சுடுதண்ணியை ஊற்றினியே...?"

என் கரங்கள் அவளின் கன்னத்தைப் பதம்பார்க்கின்றன. அவளின் செம்மை படரும் கன்னத்தை நோக்குகின்றேன்.

"நான் வெள்ளையோடா மகனே? கொய்யா என்னைக் கட்டி எவ்வளவு சந்தோஷமாக இருந்தவர்? நீயும் அதைப்போலே..."

தாயாரின் வார்த்தைகள் எழுந்து அப்பாலே சென்று அமர்கின்றேன். அமர்ந்து அவளை நோக்க — அவள் கண்ணீரை உதிர்க்கின்ருள் — பனிக்காலப் பனிநீர் முத்துக்களைப் போன்று. அத்திவலைகள் நிலத்தில் விழுந்து ஊறி மறைகின்றன. அவளின் விம்மல்கள் என் நெஞ்சில் ஓங்கியடிக்கும் சம்மட்டிகள்.

நீர் பொங்குகின்றது.

என்னருகில் வருகின்ருள். சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகின்ருள்.

"தெரியாமல் செய்திட்டன் மன்னியுங்கோ..." விசும்பலுக்கூடே சொற்கள் வெளிவருகின்றன.

"சரிசரி எழும்பு... எல்லாம் சரி..." அலட்சிய வார்த்தைகள்.

அவள் என் கால்களைக் கட்டிக்கொள்கின்ருள். இது இரண்டாவது தடவை என் கால்களில் விழுவது. முதல் முறை மூன்று மாதங்கட்கு முன் முதலிரவன்று— அதற்குப்பின்... இன்று. இந்தக் கோயில் சந்நிதியில்— ஆயிரம்பேர்கள் மத்தியில் அவளின் கரியகூந்தல் என் பாதங்களை முத்தமிடுகின்றது... நான் ஒரு முத்தமாவது இதுவரை அளித்திருப்பேனு? அவள் பெண்— உணர்ச்சிகளின் பிறப்பிடம். எத்தனை ஆசைகளை வைத்திருப்பாள்?

"எழும்பு... பானையில் தண்ணீர் பொங்குது..."

அவள் எழுந்துசென்று அரிசியைக் கிண்டிவிடுகின்ருள்.

எனக்கு வேண்டியது அழகு. அவளிடம் அது இருக்கின்றதா?

என் விழிகள் பொங்கற்பானையையும் அதன் முன்னே படைக்கப்பட்டிருப்பதையும் நோக்குகின்றன. மலர்கள்— நிறைகுடம்— அதிலிடப்பட்ட குங்குமம்— குத்துவிளக்கு — அதிலெரியும் திரிகள்... நயனங்கள் சற்றுத் தாழ்கின்றன. ஆங்கு சாணத்தில் பிடித்துவைத்த பிள்ளையார்— பிள்ளையாரின் மேலிடப்பட்ட குங்குமம்— அவர் முன்னுள்ள மலர்கள்— தேங்காய்— எலுமிச்சம்பழம்— வாழைப்பழம்...

பிள்ளையாரையும், அவளையும் மாறிமாறி நோக்குகின்றேன். அவளும் பிள்ளையாரின் நிறம் தான். கோவிலிலுள்ள தங்க நடராசர் விக்கிரகத்துக்கும் இந்தக் கரிக்கணபதியாருக்கும் ஒரே மதிப்புத்தான்.

அம்பலக் கூத்தனின் விக்கிரகம் பொன்னுலானது.

யானைமுகத்தான் சாணத்தில் ஆனவன்.

மதிப்பு—பத்தி— ஒன்றுக்கொன்று குறைவா?

மனதில் தான் பக்தி— அன்பு—இன்பம்—அழகு...

அழகு அழிவது... அநித்தியம். ஆத்மா அழிவற்ற பழம்பொருள். அவள் என் முன் உருவமற்ற—அழகற்ற அந்தச் சாணத்தாலான விநாயகராகின்ருள். அந்தப் பரம்பொருளைத் தொழும் நான் ஏன் இவளை —இந்த ஜோதியை மனதில் இறைஞ்சக்கூடாது?

உன்மத்தம் கொண்டவன் போல் அவளருகில் செல்கின்றேன் —அவள் கரங்களை எடுத்து மாறிமாறி முத்தமிடுகின்றேன்.

(யாவர் சற்பனை)

## இந்தியாவின் கப்பல் தொழில்

கப்பல் கட்டும் தொழிலிலும் இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. விசாகபட்டினத்தில் உள்ள கப்பல் கட்டும் துறையில் முதல்தரமான சரக்குக் கப்பல்கள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. இங்கு இது வரை மொத்தம் 33 கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன.

வெளிநாடுகளுடன் கடல் மார்க்கமாக நடைபெறும் வர்த்தகத்தில் 50 சதவீதம் இந்திய கப்பல்கள் மூலமாகவே நடைபெறவேண்டும் என்ற லட்சிய அளவு இன்னும் எட்டிப்பிடிக்கப்படவில்லை.

## நட்சத்திர ஒலி

வானில் வெகு தொலைவுக்கு அப்பால் எங்கேயோ இருந்து அடிக்கடி சில நட்சத்திரங்களிலிருந்து ஒலிகள் வருகின்றன. இந்த ஒலிகளை பிரிட்டனின் ஜாட்ரல் பேங்கின் தொலைநோக்கிகளும் அவை போன்ற இதர கருவிகளும் கேட்கின்றன. இந்த ஒலிகள் எங்கிருந்து வருகின்றன என்பதை மிக விரைவில் வானியல் வல்லுனர் கண்டறிந்து விடுவர் என்பதற்கான அறிகுறிகள் தெரிவதால் பேராசிரியர் ஃபிரேட் ஹோய்ஃ என்பவர் அண்மையில் அறிவித்தார்.

—

## "பசிப்பிணி மருத்துவன்"

லண்டன் மான்செஸ்டருக்கு அருகிலுள்ள ஓல்டம் என்னும் ஊரின் ஆலய மதகுருவான கிறிஸ்டபர் கோர்ட்டால்டு தமது தந்தையின் உயில்படி தமக்குக் கிடைத்த சுமார் ரூ 66 லட்சத்தையும் "பசியிலிருந்து விடுதலை" இயக்கத்துக்கு அளித்துவிட்டார்.



## ஓங்கார ஒலி வடிவே!

ஓங்கிய நற் தோற்றங் கொண்ட
ஒப்பிலாக் கோட்டை யுள்ளே
ஓங்கிடும் ஆண் மலை நிழலில்
'ஓம்' என அலை ஒதுங்க
ஓங்கில் மீன் ஒலங் குழந்தை
ஒலம்தான் என்னத் தோன்ற
ஓங்கார ஒலியே வடிவாய்
தோன்றிடுமென் கோணையப்பா!

—வே. வரதசுந்தரன்

தமிழ் வளர்த்த சான்றோர்கள்: 11

சதாவதானம் வல்ல தமிழ்ச் சான்றோன்
மேலைப்புலோலி வித்துவமாமணி

# நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்
## (1844 — 1907)

— வித்துவான் க. வேந்தனார் —

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

கதிரைவேற்பிள்ளை அவர்கள் கற்றுக்கனிந்த நாவன்மையும் கலையாய்வுத்திறனும் பெற்றுப்பொலிந்த புலவர் பெருமான். யாழ்ப்பாணத்தைச்சார்ந்ததும்புலவர்வாழும் புகழும், புலவர் போற்றும் புகழும் பூண்ட திருவால் பொலிவதுமான புலோலி ஊரிற் பிறந்தவர்.

இவரின் தந்தையார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் போலச் சைவத்திருவும் தமிழ் மரபும் தழைக்க வாழ்ந்த வேளாண் பெருங்குடித் தோன்றல் நாகப்பிள்ளை யென்னும் நல்லோராவர். கல்விகற்கும் பருவத்திலேயே கதிரைவேற்பிள்ளை அவர்கள் மிகமிக வல்லமையாளராகவும், நினைவாற்றல் நிரம்பியவராகவும் விளங்கிப்பலரின் பாராட்டுதலையும் பெற்றார். பாராட்டுதலைப் பெற்றும் தொடர்ந்து படிக்கக்கூடிய பொருள் நிலை இல்லாமையால் மிகவும் அல்லற்பட்டார்.

இங்ஙனம் இளமைப் பருவத்திலேயே இல்லாமையால் உள்ளம் உடைந்த பிள்ளை அவர்கள், தமது இருபத்திரண்டாம் ஆண்டிலே பிறந்த ஊராகிய புலோலியை விட்டுச் சென்னை நகருக்குச் சென்றார். சென்ற பின் பிள்ளை அவர்கள் திருவருட் செயலால் அக்காலத்தில் ஆரியம், ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிகளிலும் வல்லமை வாய்ந்தவராய்ச் சென்னையில் வீற்றிருந்த திருகோணமலை கனகசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் பிற இலக்கியங்களையும் கற்றுத்தெளிந்தார். பிள்ளை அவர்களின் விடாமுயற்சியும் வியத்தகுமதி நுட்பமும் அவரின் கல்வி ஆற்றலை மிக, மிகப் பெருக்கி விட்டன. தமிழகத்திலேயே தன்னேரில்லாத் தனிப்பெருங் கல்வியாளராகப் பிள்ளையவர்கள் திகழ்ந்தார்கள்.

சென்னைமாநகரம் எங்கும் சென்று, சென்று செந்தமிழ்ச் சிவவீறு கனிந்த சொற்பொழிவுகள் பல மிக அற்புதமாக ஆற்றினர். இலக்கண அமைவும், இலக்கியத் தோய்வும், சித்தாந்தச் சைவத்தெளிவும், சொல்வன்மையும் செறிந்த பிள்ளை அவர்களின் சொற்பொழிவுகள் பல்கலை வல்ல பண்டிதர்களையும் ஆராய்வுத் திறம் அமைந்த அறிஞர்களையும் பிற சமயப் புலமையாளர்களையும் பன்மொழி வல்லார்களையும் கவர்ந்து களிபேருவகை அடையச் செய்தன. சொற்பொழிவுகள் வெறுஞ் சொல்லடுக்குகளாகமட்டும் இருந்தில. ஒரு நாளில் பத்துச் சொற்பொழிவுகளை ஆற்றினாலும் அவை ஒவ்வொன்றிலும் புதுப் புதுப் பொருளும் சொல்லும் போக்கும் நடையும் எழுச்சியும் பொருந்திப் பொலிந்தன. பிள்ளை அவர்களுக்கு, எங்கும் வரவேற்பு; எங்கும் புகழ்மாலை. அவர்கள் பேசாத பேரவைகள் இல்லை. புலவர் பேரவைகளில் பேசுவார். மன்னர் பேரவைகளில் பேசுவார். மாற்றார் அழைப்புக்களை ஏற்று, அவர்கள் கூட்டிய அவைகளில் சென்று, கேட்டார் வியக்கத் தக்க முறையில், வாதித்துத் தமது கொள்கையைச்சாதித்து வாகை புனைந்து, மாற்றாரின் மதிப்பை ஈட்டிக்கொள்வார்.

இவர் மாயாவாதக் கொள்கையை மறுத்துப் பேசி வாகை சூடிய மாண்பை மதித்துச் சென்னையில் வாழ்ந்த வித்துவான்கள் காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தலைமையில் கூடிய பேரவையில், மாயாவாத தும்சகோளரி என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார்கள். மேலும் இவரின் (சித்தாந்த) சைவசித்தாந்தப் புலமையை வியந்து, சைவசித்தாந்த மகா சரபம் சித்தாந்த பானு எனவும் கற்றோர் வழங்கிய பட்டங்கள் பல.

இங்ஙனம் மதிப்பும் வரவேற்பும் பெற்றுச் சிறந்த பிள்ளை அவர்கள், 1898-ம் ஆண்டில் மயிலாப்பூர் செந்தோம் உயர்நிலைப்பள்ளியில் தமிழ்ப்புலமை நடாத்தும் வாய்ப்பை அடைந்தார். அக் கல்லூரியில் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்ற மாணவர்களில்தலைமைபெற்றவர் திரு. வி. கலியாண சுந்தரனார் ஆவர். திரு. வி. க. அவர்கள் எமது ஆசிரியர் கதிரைவேற்பிள்ளை அவர்களைப்பற்றி கரைகடந்த ஆர்வத்துடனும், பெருமிதத்துடனும், பேசியும் எழுதியும் போற்றி மகிழ்வார்கள்.

"சென்னை வெஸ்லி கலாசாலையில் நான் மாணாக்கனாய் இருந்தபோது, யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களது அன்புக்கு உரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக் கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர். அவரிடம் யான் நெருங்கிப் பழகிவந்த போது பெரிய புராணத்தைப் படிக்குமாறும் நாயன்மார் வரலாறுகளை உரைநடையில் எழுதி எழுதிப் பயிற்சி பெறுமாறும், அவர் எனக்கு அடிக்கடி சொல்லிவருவர். அவ்வாறேயான் பெரிய புராணத்தில் சிறு தேர் உருட்டியும் சிற்றில்கட்டியும் விளையாடி வந்தேன்" எனப் பிள்ளை அவர்களின் நினைவுச் சின்னமாகத் தம்மால் அரும்பத ஆராய்ச்சிக் குறிப்புரையுடனும் வசனத்துடனும் வெளியிடப்பட்ட பெரிய புராண முன்னுரையில் திரு. வி. க. அவர்கள் எழுதியுள்ள உரைப்பகுதியை நோக்குக.

இனிப் பிள்ளை அவர்கள் நாவலர் பெருமான் அவர்களால் தொடங்கப்பட்ட அருட்பா—மருட்பாப் போரைத் தொடர்ந்தாற்றி வெற்றி கண்ட மேன்மை மிகப் போற்றத்தக்கதாகும். தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளுடன் பல பேரவைகளில் எதிர்த்துச் சொற்போராடிய சிறப்பும் பிள்ளையவர்களுக்கே உரியதாகும். கூர்மபுராண விரிவுரை, பழனித்தலபுராணவுரை சைவ சந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் என்பன பிள்ளை அவர்கள் ஆக்கியருளிய நூல்களாகும்.

இங்ஙனம் பேராற்றல் வாய்ந்த பிள்ளை அவர்களைத் தமிழகத்தர்க்குத் தந்துதவிய மேலைப்புலோலியின் மேன்மை சாலச் சிறந்ததாகும்

# கமத்தொழிலுக்கு வளமான மண்

— தெல்லியூர் செ. நடராசா —

"மண்ணானது பலபல இம்மிகள் சேர்ந்து உண்டாகியிருப்பதாகும். பல்வேறு அளவுகளிலும் இந்த இம்மிகள் காணப்படும். பலபல தூள் பொருள்களோடு சிறிய சிறிய சரளைக் கற்களும் மற்றும் சுண்ணக்கற்களும் கூடச்சேர்ந்திருக்கும். இந்த மண்ணிலே பரந்துள்ள பல்வேறு இம்மிகளைக்கொண்டும்நிலத்தினது தன்மை பேதப்படும். பேதப்படும் ஒவ்வொரு நிலத்துக்கும் தனித்தனிக் குணமுண்டு. அவைகளது விகிதாசாரத்தைப் பொறுத்து நிலத்தது தன்மையும் குணங்களும் அமைந்திருக்கின்றன. இந்த இம்மிகளுக்கிடையில் உள்ள வெளிகளிலே நீரும், காற்றும் சேர்ந்திருக்கின்றன. இந்த இடைவெளிகளுக்குள்ளே ஒன்றுக்கொன்று தொடர்புண்டு. இத்தொடர்பு காரணமாகக் காற்றோட்டம் நடப்பதற்கும் நீரோட்டம் இருப்பதற்கும் வசதிகளுள. இவற்றிடையே வடிகாலில் நீர் பாய்வதுபோல நிலத்துநீரும் பாய்ந்துசெல்லும். இப்படியான இடைவெளிகளை 'சந்துவெளிகள்' என்று கூறுவர். இந்தச் சந்துவெளிகள் நிலத்துக்கு நிலம் பேதப்படும். நிலத்தினது மேற்பரப்பு அமைப்புக்கும் உட்பரப்பு அமைப்புக்கும் பேதமுண்டு. இப்பேதங் காரணமாக நீரோட்டமும் பாதிக்கப்படும். நிலத்தின் உட்பரப்பு சந்துவெளிகள் அநேகமாக அகன்றிருக்கும். இதனால் நீர் இறங்கி அடிமட்டத்துக்குப் போய்விடுகின்றது. மேற்பரப்பு விஸ்தீரணத்திற்கும், உட்பரப்பு விஸ்தீரணத்துக்கும் ஒரு தொடர்புண்டு. இத்தொடர்பிலே பேதங்களதிகரித்தால் நீர் பாய்ந்து செல்லும் அளவிலும் பேதங்களதிகரிக்கும்.

மண்ணிலே சேர்ந்திருக்கும் இம்மிகளது பரிமாணத்தைக் கொண்டுதான் மண்ணது இயல்புகளை கணக்கிடமுடியும். இம்மிகளது பரிமாணம் வேறுபட வேறுபட மண்ணது இயல்பும் வேறுபடுகின்றது. இந்த மண்ணியல்பானது ஒரு மண்ணது நயத்தன்மையை, முரட்டுத்தன்மையை அல்லது இடைப்பட்ட ஒரு தன்மையைக் குறிப்பதனால் மண்ணிம்மிகளது பரிமாணப்பகுதிகளது பேதங்களும் அவற்றது விகிதத்தைப் பொறுத்து இருக்கும். அந்நிலத்து மண்ணானது எவ்வாறு கையாளப்பட்டாலும் அந்த இயல்பை எப்படியும் மாற்றிக்கொள்ளமுடியாது. மண்ணிம்மிகள் தனித்தனியாகவும், சேர்ந்தும் இருப்பதை மண்ணமைப்பு என்பர். நிலத்தது இயல்பானது மாறும் தன்மையதாக இருக்கும்போது அதன் அமைப்பு மாறுந்தன்மையுடையதாக இருக்கின்றது. மண்ணிம்மிகள் ஒன்றுசேர்ந்து பிடிப்பாகி இறுகியிருப்பதை 'கடுநிலம்' என்றும் அவ்வளவு இறுக்கமான பிடிப்பின்றித் தளர்த்தியாக இருக்கும் நிலத்தை 'மெதுநிலம்' அல்லது 'இளக்க நிலம்' என்றும் கூறுவர். மண்ணிலுள்ள பதார்த்தச் செறிவைக்கொண்டு நிலத்தின் தன்மைகள், நிலத்தின் பிரிவுகள் கூறப்படும். இந்த மண்யாவையும் 'நிலையான மண்' என்றும் 'பெயர்ச்சி மண்' என்றும் வகைப்படுத்தமுடியும். அதிகமாகச் சமபூமிகளிலுள்ள மண் நிலையான மண் வகுப்பையும் பள்ளத்தாக்குகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் உள்ள மண் பெயர்ச்சி வகுப்பையும் சேர்ந்தனவாகக் கொள்ளலாம். இந்த மண் நிலங்களிலே முக்கியமானவைகளாக நான்கு அம்சங்கள் அமைகின்றன. சிலவிடங்களில் ஐந்து அம்சப்படுத்தியும் கூறுவர். மண்ணிலே பரந்திருக்கும் இம்மிகளது அமைப்பைக் கொண்டே இந்த நான்கு அல்லது ஐந்து அம்சங்களும் அமைகின்றன இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் தனிக் குணமுடையவைகளாகும். அவை அமைந்திருக்கும் விகிதாசாரத்தைப் பொறுத்து அவற்றது தன்மையும், குணங்களும் பேதப்படும்.

## மண் அம்சங்கள்

மண்ணிலே இம்மிகளது அமைப்புக்கேற்ப நான்கு அல்லது ஐந்து அம்சங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டோம். அவைகளை நான்கு அம்சங்களாகக் கூறும்போது, பருத்த மணல், மென்மணல், வண்டற் களிமண், களிமண் என்றும், ஐந்து அம்சமாகக் கூறப்படும் போது பல்வேறுபட்ட சரளைக் கல், பருமனுடைய மணல், மணல், பொடிமணல், குறுமண், களிமண் என்றும் கூறுவர். இவற்றிலேயுள்ள தொடர்புகளை நோக்கும்போது, பருத்த மணல், மென்மணல், குறுமண் அல்லது வண்டற் களிமண், களிமண் என்று எடுத்துக் கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

மண்ணைப் பற்றிய ஆராய்ச்சி வல்லுனர் நிலத்தை இயந்திர சாதனங்களைக்கொண்டு ஆராய்ந்து மண்ணணுக்களை அவற்றது பருமனுக்கேற்ப பகுத்துணருகின்றனர். அவர்கள் கையாளும் பல்வேறு நுட்ப முறைகளாலும் மண்பகுப்புக் கூறப்படும்.

## பருமனும் பகுப்பும்

சரளைக் கல்லுகளையும் உடைந்த துண்டங்களான பாறைத்துணுக்குகளையும் சுண்ணக் கற்களையும் கொண்டதாக இருப்பதை பருத்தமணலாகவும், காற்றோட்டத்துக்கும் நீர்வடிவுக்கும் வசதியான முறையிலே இம்மிகளால் சூழப்பட்டிருப்பதை மணல் என்றும் அதற்கடுத்ததாக மென்மை கூடக்கூடவும் நீரைப் பிடித்து வைத்துக் கொள்ளும் சக்தியையும் கமத்தொழிற் பயிராக்கத் துக்கானதாக இயல்புடையனவாக அமையும் வரையும் உள்ள நிலைகளை பொடிமணல், குறுமண், களிமண் என்றும் இவற்றினது பருமனை 1/20 அங்குலம் முதலாக 1/25000 அங்குலம்வரை சுற்றளவுள்ளவைகளாகவும் கணித்துள்ளனர்ஆராய்வாளர். இந்நிலங்களில் களிமண் பகுதியே கமத்துக்கு ஏற்றதென்றும் நிலத்திலுள்ள வெகு நுண்மையான கூழ்ப்பொருளானது அங்ககப்பொருளுடன் கலந்து மணல் போன்ற இம்மிகளுக்கு மேலாகப் படர்ந்து இருக்கும். இதிலேபயிருணவும் மிகுந்திருப்பதால் இதுகமத்தொழிலுக்கு மிகவும் உபயோககரமானதாகும். இதிலே நீர் துரிதமாக, மணலிலே வடிந்து செல்வது போல, வடிந்துசெல்லமாட்டாது. இந்நிலமானது நீரைப் பிடித்து வைத்துக் கொள்ளும். இந்தக் களித்தன்மையும் ஓரளவு கணிப்புக்கத்கப்படாமலும் பயிர்ச்செய்கைக்கு உதவமாட்டாது. மண்ணிலே மணல் குறுமண் களி ஆகியவற்றைக் கொண்டு முக்கிய முப்பிரிவுகளும் மற்றும் களிநிலத்தையும் அதன் தன்மைக்கேற்ப வேறுவேறு உட்பிரிவுகளையும் காட்டிபேதப்படுத்தியும் அவற்றின் குணபாடுகளை விளக்கியும் ஆராய்ச்சியாளர் காலத்துக்குக் காலம் தெரிவித்து வருன்கிறனர். ஒரு மண்ணது வளமானது அதனது சேர்க்கையின் அளவுக்குத்தக்கதாக பேதப்படும். மண்ணுச்செறிவும் அதன் நீர்ச்சேகரிப்புத்தன்மையும் உட்டணநிலைமையும் மணல்—களி வரையுள்ள பொருள்களது அமைப்பின்படியே வித்தியாசப்படும். பெருமணலிலே பருத்த பகுதிகள் 90%மும் பொடிப் பகுதிகள் 10%துக்கும் கீழும் மென்மணலிலே பருத்த பகுதிகள் 70—90%மும் பொடிப்பகுதிகள் 10%துக்கும் 30%துக்கும் இடையிலும் குறுமன் அல்லது வண்டற்களிமண் 50—70% பெரும் பகுதிகளை உடையதாகவும் 30க்கும் 50%ற்கும் இடைப்பட்ட பொடிப் பகுதிகளை உடையதாகவும் களிமண் 50%ற்குக் கீழ் பருத்த பகுதிகளையும் 50%ற்கு மேல் பொடிப் பகுதிகளையுடையதாகவும் இருக்கும். பருத்த பகுதிகள் அதிகமாகவுள்ள மண்ணிலே நீரையுறிஞ்சுந் தன்மை அதிகமாகவும் வடிய விடுந் தன்மை விரைவாகவும் இருக்கும். பொடிப்பகுதிகள் அதிகமாகவுள்ள மண்ணிலே நீருறுஞ்சுந்தன்மையும் நீரை வடிய விடுந் தன்மையும் குறைவாக இருக்கும். பருத்த பகுதிகள் நிறைந்த மண்ணிலே பயிருணவு குறைவாகவும் பொடிப் பகுதிகள் நிறைந்த பகுதிகளிலே பயிருணவுகள் மிகுதியாகவும் இருக்கும். இவற்றினது குணபாடுகள் ஒன்றுக் கொன்று நேர்மாறானவைகளாகும். இவற்றிலே நன்மையான பகுதிகளும் தின்மையான பகுதிகளும் கலந்துள.

## மண் குணபாடுப் பிரிவு

மண்ணிலேயுள்ள பருத்த பகுதிகளான பருத்த மணல் தொடக்கம் மென்மையான பொடிக்களி வரையுள்ள நிலத்தின் குணபாடுகள் நேர் நேர் எதிரானவைகளாகும். இந்தக் குணபாடுகளைக் கொண்டு நிலத்தைப் பல வகுப்புகளாகப் பகுக்கலாம். இந்தப் பகுப்புகளுக்கு மண்ணது அமைப்பே பெரிதும் உதவுகின்றது. அடுத்து அதன் இயல்பு வழிகாட்டுகின்றது. பருத்த பகுதிகளைக் கொண்ட மண்ணும் ஆகமென்மையும் களித் தன்மையும் அதிகமாக கொண்ட மண்ணும் பொதுவாக கமத் தொழிலுக்கு ஏற்புடைத்தன்று- குறுமண் அல்லது வண்டற் களிமண் தான் கமத் தொழிலுக்கு பெரிதும் ஏற்றதாகும், இதனையே கமத்தொழிலாளரும் பெரிதும் விழைவர். இக்குறுமண் நிலம் "கடுநிலம்" என்பதற்கும் "மென்னிலம்" என்பதற்கும் இடைப் பட்டதாக இருக்கின்றது. இதனை உழுது சாகுபடி செய்வது சாத்தியமும் சுலபமும் ஆகும்.

## மூன்று சக்கரக் கார்

மணிக்கு 60 மைல் வேகத்தில் செல்லும் புது பாண்டு மினிகார் ஒன்று லண்டனில் செய்யப்பட்டுள்ளது. இக்காருக்கு 60 மைலுக்கு ஒரு கலன் பெட்ரோல்தான் செலவாகும்.

மூன்று சக்கரங்கள்கொண்ட இச் சிறு காரில் 250 கன மீட்டர் அளவுகொண்ட இரு சிலிண்டர் எஞ்சின்கள் இருக்கும். இதன் மூலம் முந்திய ஒற்றை சிலிண்டர் எஞ்சினை விட 25சதவிகிதம் சக்தி அதிகம் கிடைக்கிறது.

# காட்டிக் கொடுத்த கண்கள்

மகான்

காலை ஒன்பதரை மணியிருக்கும் நானும் எனது நண்பன் பிரான்சிஸும் வீட்டை விட்டு அவசரம் அவசரமாக, ஓட்டமும் நடையுமாக புகையிரத நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். நாவலப்பிட்டியில் ஒரு நண்பரைச் சந்திக்கவேண்டும். கையிலும் போதிய பணமில்லை. நாவலப்பிட்டிக்குப் போவதற்குரிய பணம் மட்டும் எங்களது பாக்கெட்டுக்குள்ளிருந்தது.

கம்பளை புகையிரத நிலையத்துக்கு அருகில் வந்துவிட்டோம். ஒன்பது முப்பத்தெட்டுக்கு புறப்படும் கடுகதிப் புகையிரதம், ஒருநிமிட நேரம் கூடத் தாமதிக்காமல் "ஹோர்ன்..." என்று விசிலடித்துக்கொண்டு புறப்படத் தொடங்கியது. நாங்களோ இன்னும் டிக்கட் எடுக்கவில்லை. ஆனல் இந்தப் புகையிரதத்தைத் தவறவிட்டாலும் அந்த நண்பனைச் சந்திக்கமுடியாது. மெதுவாக நகர்ந்துகொண்டிருந்த புகையிரதத்தில் ஏறிவிட்டோம். ஆமாம்! எங்களுக்கு அந்தத் துணிச்சல் எப்படி வந்ததோ தெரியவில்லை.

நான் பயந்தவன், நண்பனைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை, ஆனல் நண்பனுக்கு ஆறுதல் சொல்லவேண்டிய நிலைமையில் அப்பொழுது நானிருந்தேன் என்ருல் என் நிலைமை எப்படி இருக்கும் என்பது உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. எத்தனையோ தடவைகள், எத்தனையோ இடங்களுக்கு ரயிலில் சென்றிருக்கின்றேன். ஆனல் டிக்கட் பரிசோதகர்கள் எனது கண்களுக்குத் தென்பட்டாலும், 'டிக்கட் சோதனை' நடைபெறுவது மிகக் குறைவு. "எத்தனையோ முறைகள் டிக்கட் சோதிக்காதவர்கள் இப்பொழுதா சோதிக்கப்போகிருர்கள்?" என்று எனது மனம் கேட்டது. ஆனல் ரயிலோ... எந்தவித மான பாரபட்சமும் காட்டாது மற்றவர்களுடன் எங்களையும் சேர்த்து ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது.

சுமார் ஐந்து மைல்களை, நாங்கள் சென்ற ரயில்வண்டி கடந்திருக்கும்! டிக்கட் பரிசோதகர் ஒருவர் ஒருவர் எங்களது கண்களுக்குத் தென்பட்டார். எங்களை அறியாமலே கால்கள் நடுங்கத் தொடங்கின. நண்பனின் 'திருட்டு விழியே' எங்களைக் காட்டிக்கொடுத்துவிடும் போல் தெரிந்தது. அந்த நல்ல மனிதர் —டிக்கெட் பரிசோதகர் எங்களையும் தாண்டிச்சென்று விட்டார். ஆமாம், அவர் டிக்கெட் சோதனையிடவில்லை, நாங்களிருந்த... இல்லை; நாங்கள் நின்றுகொண்டிருந்த வாசலையும் தாண்டிச்சென்று அந்த டிக்கெட் பரிசோதகர் மீண்டும் ஒருமுறை அப்பக்கம் வந்தார். நண்பனின் கண்களைக் கண்ட அவர் எங்களது டிக்கெட்டைக் காட்டும்படி வாய்திறந்தே கேட்டுவிட்டார். முதலில் நடுங்கிய நாங்கள் இப்போது விஷயத்தைப் பயப்படாமல் சொன்னேம். அவர் நம்பவில்லை. ரயிலும் நாவலப்பிட்டியை அடைந்து விட்டது! நாங்கள் இறங்கினேம் — இறக்கப்பட்டோம்.

ரயிலில், டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ததற்காக இரட்டைக் கட்டணத்துடன் ஐந்து ருபாய் அதிகமாகச் செலுத்தும்படி அவர் எங்களைக் கேட்டார். அதாவது பத்து ருபா எழுபது சதம் செலுத்தவேண்டும்! பாக்கெட்டில் எழுபது சதம்தான் இருக்கிறதென்று உண்மையைச் சொன்னேம். ஆனல் டிக்கெட் பரிசோதகர் எங்களை விடவில்லை. பொலிஸாரிடம் ஒப்படைக்கப்போவதாகப் பயமுறுத்தினர். எங்களுக்கு உண்மையிலேயே பயம் வந்துவிட்டது. நேரம் சென்றுகொண்டிருந்தது.

குறிப்பிட்ட நேரத்தில் வருவதாகச் சொன்ன நண்பனைக் காணவில்லையே என்று தேடிக்கொண்டு, எனது நண்பனின் நண்பன் அங்கு வந்தான். எங்களைத் தேடினன். முடிவில் கண்டுகொண்டான். அவனைக் கண்டது கடவுளைக் காண்பது போல இருந்தது. அவனிடம் நிலைமையை எடுத்துக்கூறினேம். பரிதாபமாக நின்றுகொண்டிருந்த எங்களைக் கண்டு மனமிரங்கி, பச்சை நோட்டு ஒன்றையும், சில்லறையையும் எடுத்துக்கொடுத்தான் டிக்கெட் பரிசோதகரிடம். அப்பாடா! ஏதோ கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த கிளிக்கு விடுதலை கிடைத்தது போல் இருந்தது எங்களுக்கு!

எனது வாழ்வில் நடந்த — மறக்கமுடியாத — நெஞ்சில் நிலைத்த இந்தச் சம்பவத்தை என்னல் என்றுமே மறக்க முடியாது. இது எனக்கும், எனது நண்பனுக்கும் படிப்பினையாக இருந்தாலும் உங்களுக்கு...? ஓர் புத்திமதி!

---

**சிறந்த நூல்**

ஆசிரியர்: சோமு சிறந்த நூல் எதடா?

சோமு: கப்பல் மார்க் நூல் சார்.

அனுப்பியவர்:
இரா. தர்மலிங்கம்,
கோவில் தெரு,
நெடுந்தீவு.

---

## சிந்தனைக் கேணி...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

மண்டபத்தில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாலு நாயன்மார்களின் உருவங்களும் பிரம்மா, விஷ்ணு, பிள்ளையார் போன்ற கடவுளின் உருவங்களும் இம் மண்டபத்தின் தூண்களில் ஐந்துஅடி உயரத்தில் சிலைகளாகக் காணப்படுகின்றன. இவற்றின் நடுவே விநாயகப் பெருமானின் பெரியஉருவமும், இருபக்கங்களிலும் இருயானைகளும் காணப்படுகின்றன. இத் தேவாலயத்தின் சுவர்களில் கண்ணப்பநாயனர் சரித்திரம், கஜமுகசங்காரம், கங்காநதியின் சரித்திரம், இராவணன் மகாமேரு மலையைத் தூக்க முயன்றகதை, முதலைவாய்ப் பிள்ளையை மீட்டகதை, திமிங்கிலத்துடன் சண்டை செய்த கதை போன்ற பல சரித்திர சம்பந்தமான கதைகள் சித்திரமாகத்தீட்டப்பட்டுள்ளன. இச் சித்திரங்கள் சட்டப்படியேயும், தெய்வநீதிப்படியேயும், தர்ம வழிப்படியும், மானிடநீதிப்படியும் அமைந்துள்ளன.

இக்கோவிலின் மூலஸ்தானம் அதிக பிரகாசமுடையது. இதனுள்ளிருக்கும் விநாயக்கடவுளின் விக்கிரகம் அதிக பக்தியும் புதுமையும் வாய்ந்தது. இதைச் சிறப்புடன் வைத்திருப்பதற்குக் காரணம் திரு குமாரசுவாமிக்குருக்களின் அதிக பிரயாசையும் அவருக்கு உதவியாயுள்ள திரு. இரத்தினசபாபதி ஐயரின் கடமைதவருத ஊக்கமுமாகும். இக்கோவிலின் உள்வீதியில் இலட்சுமியின் சித்திரம், பிரம்மாவின் பலதலைகள் கொண்ட சித்திரம், காளிதேவியின் சித்திரம் போன்ற பல சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன. அத்துடன் இக்கோவிலின் பூந்தோட்டத்துள்ளேயிருக்கும் சிவன கோவிலில் அரக்கர்கள் சக்கராயுதத்துடன் காவல் செய்வதையும் சித்திரமாகக் காணலாம்.

இதன் வசந்த மண்டபத்தினுள் ஓர் கேடயம் போன்ற இருப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வாசலின் மேற்பாகத்தில் சிவபெருமான் கயிலாயத்தில் உமையம்மையுடன் வீற்றிருப்பதையும் அவருடன் முருகப்பெருமான், விநாயகப் பெருமான் போன்றவர்கள் வீற்றிருப்பதையும் சிலமுனிவர்களின் தமது குறைத்தவத்தினல் தமது உருவத்தில் பாதி மனித உருவமும் பாதி மீனுருவமும் உடையவர்களாகவும் சிலரின் கால்கள் புலியின் கால்கள் போன்றனவாகவும்காட்சியளிப்பதை உருவத்தில் காணலாம். இதனருகேயுள்ள சுவரில் நடராசப்பெருமான் நடனமாடுவதையும் திருமால் திருப்பாற்கடலில் நித்திரைசெய்வதையும் அவரது உந்திக்கமலத்தில் பிரம்மா தோன்றுவதையும் பின்னர் அவர்கள் இறைவனின் அடிமுடி தேடியபோது இறைவன் சோதிவடிவாகக் காட்சியளிப்பதையும் சித்திரமாகக் காணலாம்.

---

# சிறுவர் பூங்கா

## யானை தின்னி எறும்புகள்

தென் ஆசியா, தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, ஆகிய நாடுகளிலுள்ள காடுகளில் இருக்கும் எறும்புகளைக் கண்டால், சிங்கம், புலி, யானை ஆகிய வலிவுமிக்கமிருகங்களுக்கும் குலைநடுக்கமாம்! அத்தனை கொடுமையான எறும்புகள் அங்குள்ளன.

அப்படி வலிவுமிக்க மிருகங்களும் பயந்து நடுங்கும்படியாக அவைஎன்ன செய்கின்றன? என்று கேட்கத்தோன்றலாம். அதற்கு இதோபதில்.

அந்தக் கொடுமைமிக்க எறும்புகள் இலட்சக்கணக்கில் அணிவகுத்துச் சென்று, உயிருள்ள எந்தப் பிராணியையும் விடாமல் அவற்றின் மீது படையெடுத்து அப்படியே கடித்து அரித்துதின்றுவிடுகின்றனவாம்! காட்டு விலங்குகளிலும் மிகவும் கொடுமைமிககதான புலிகளைக் காட்டிலும் பயங்கரமானவையாம் இந்த எறும்புகள்! காட்டையேகட்டிஆளும் பெரிய மிருகங்களும், சாதாரணமான சிறியமிருகங்களும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் இந்த எறும்புகளின் கடிக்குட்பட்டு, முக்கி, முனகி அழுது, அரற்றி,கதறி கண்ணீர் விட்டுத் தங்கள் உயிரைத் துறந்து, அவற்றிற்கு உணவாகின்றனவாம்! அருகில் ஏதாவது நீர்நிலை இருந்து அதில் எந்த மிருகமாவது இறங்கி நின்ருல் தான் அந்த கொலை பாதக எறும்புகளின் சாவுப்பிடியினின்றும் தப்பமுடியும்.

யானைகளையே கூடக்கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்து அரித்துத் தின்னக்கூடிய இந்த எறும்புகள் ஆடு,மாடு, குதிரை, கோழி ஆகியவற்றைச் சில நேரத்தில் தீர்த்து விடவும் கூடியனவாம்.

ஆபிரிக்காவில் இத்தகைய எறும்புப்படை ஊர்ந்துவருவதைக்கண்டுவிட்டால், காட்டின் அருகிலுள்ள மக்கள் தமது பண்டம் பாத்திரங்களையெல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு வீடுகளை இருந்தபடியே விட்டுவிட்டு எங்காவது ஓடிவிடுவராம்! வீடுகளிலுள்ள உணவுப் பண்டங்களையும், எலி, பூனை போன்ற பிராணிகளையும் உண்டுவிட்டு அந்த எறும்புகள் போன பிறகு சாவகாசமாகத் திரும்பிவருவராம் அந்த மனிதர்கள்!

## யாழ்ப்பாணக் கோட்டை

— எஸ். டி. ராஜன் —

1680-ம் ஆண்டு, யாழ்ப்பாணக் கடற்கரையில் பாதுகாப்புள்ள பெரிய கோட்டையொன்றை ஒல்லாந்தர் கட்டினுர்கள். இக்கோட்டையைஒல்லாந்தர் காவலுக்காகக் கட்டினுர்கள். ஊர்காவற்றுறை, காலி, முதலிய இடங்களில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டைகளைவிட யாழ்ப்பாணக் கோட்டை பெரியது.

யாழ்ப்பாணக்கோட்டையிலே முப்பதடிக்குமேல் உயரமுள்ள மதில்களும், கடல்நீரால் நிரம்பப்பெற்ற ஆழிகளும் உள்ளன. கோட்டைக்குள்ளே போவதற்கு குகைபோல ஒரு வழி இருக்கின்றது. இதன் வாயிலில் இருக்கும் பெரிய கதவுகளைத் தாண்டித்தான உள்ளே செல்லவேண்டும்.

சிறைச்சாலை, சிறைச்சாலை வைத்தியர்விடுதி, சிறைச்சாலை அதிபரின் இருப்பிடம், இராசமாளிகை முதலியனவற்றுடன் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் கோட்டைக்குள் இருக்கின்றன.

காங்கேயன்துறையில் இருந்த போர்த்துக்கீசரின் கோட்டையை ஒல்லாந்தர் இடித்து அக்கற்களைக்கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டினர். அவர்கள கற்களைப் போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்றவில்லை. காங்கேயன் துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலும் வீதியின் இருமருங்கும் கூலியாட்களை நிரையாக நிறுத்தி, கற்களைக் கைமாறலாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள் என்று ஒருகதை நிலவிவருகிறது.

---

கவிதை சொல்லும் கதை

## துட்டச் சிறுவன்

— 'முகிலன்' —

கிட்டு என்னும் ஒரு பையன்
துட்டச் செய்கை மிகுந்தவனும்
பள்ளிக் கூடம் செல்லாது
துள்ளித் திரிந்தான் தெருவினிலே.

வீட்டில் வேலையும் செய்யாது
நாட்டில் வீணய் அலைந்திட்டான்
எட்டு இரண்டு வயதடைந்தும்
கெட்ட குணங்கள் மாறவில்லை.

மட்டிப்பயலும் ஒரு நாளே
துட்டச் சிறுவர் பலருடனே
கூடிச் சென்ருன் தோப்பினிற்கே
தேங்காய் திருடும் நோக்குடனே!

"தென்னை மரத்தில் ஏறிடவே
உன்னைத் தவிர ஆளில்லை"
என்று சிறுவர் கூறிடவே
ஆமென் றேப்புக் கொண்டானே

பாதி மரத்தில் ஏறிடவே
பாதம் சறுக்கி விழுந்திட்டான்.
கிட்ட நின்ற சிறுவரெல்லாம்
எட்டப் பறந்தார் விட்டுவிட்டு.

கீழே விழுந்த கிட்டுவுமே
கண்ணீர் உகுத்தான் மனம்நொந்து
துட்டச் செய்கை அனைத்தையுமே
விட்டு விட்டான் அன்றுடனே!

★

## எதற்குத் தம்பி எதற்கு?

— செ. மகேந்திரன் —

கண்ணெதற்குத் தம்பி கண்ணெதற்கு - உந்தன்
கண்ணிரண்டேதுக்கடா? - இந்த
கள்ளர் கசடர்கள், காட்டிடும் வித்தையை
கண்டு களித்திடவா

இல்லையடா தம்பி இல்லையடா - எங்கள்
இன்னலைக் கண்டேயுடன் - அவை
நல்லா தொழித்திட நல்ல வழிவகை
இன்றே தெரிந்திடத்தான்.

காதெதற்குத் தம்பி காதெதற்கு - உந்தன்
காதிரண் டேதுக்கடா? - இந்த
கருக்கற்ற வார்த்தைகள் பேசிடும் மாந்தரின்
கதைகளைக் கேட்டிடவா?

இல்லையடா தம்பி இல்லையடா - பல
இனியநல் வார்த்தைகளை - உடன்
இன்பமாய்க் கேட்டு மகிழ்ந்து மகழ்ந்து, தன்
இதயத்தில் வைத்திடத்தான்.

வாயெதற்குத் தம்பி வாயெதற்கு - உந்தன்
வாயிருந் தேதுக்கடா? - இந்த
வம்பளப் போருடன் வாயாடிப் போரிட்டு
வாழ்வைக் குலைத்திடவா?

இல்லையடா தம்பி இல்லையடா - மிகு
இருள்சூழ் உலகமிதை - நல்
இன்ப ஒளியில் நடத்தித் தக்கநல்
இனியவை கூறிடத்தான்.

# 'பழைய சேவையிலுள்ளவரின் இடர்களை நீக்க உதவுக'

## அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தமிழ் எழுதுவினைஞர் வேண்டுகோள்

கொழும்பு, சனி

பழைய சேவையிலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் எந்த விதமான இடர்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாமல், இளைப்பாறும் காலம் வரை அவர்கள் தொடர்ந்து சேவை புரிய வகை செய்யவேண்டும் என்றும் அவர்களின் பதவி, சம்பள உயர்வுகள் அரசகரும மொழிச் சட்டத்தினுல் தடைப்படக்கூடாது என்றும் இந்த விஷயத்தில் தங்களுடன் ஒத்துழைக்கும்படியும் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயலாளர் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களையும் கேட்டுள்ளார்.

தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயலாளர் எல்லா அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:—

"அரசகரும மொழிச்சட்டம் அமுல்நடத்தப்படுவதினுல், தமிழ்ப் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளைக் களைந்தெறிவதற்கு தங்களது ஒத்துழைப்பு எமக்கு மிகவும் தேவைப்படுகிறது. அரசகரும மொழிச்சட்டம் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தின், குறிப்பாக சட்ட அமுலோடு தொடர்புடைய திணைக்களங்களின் போக்கு விபரீதமாக மாறியுள்ளது.

சிங்களவர்களல்லாத தமிழ்ப் பேசும் ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் அரசகரும மொழிச் சட்டத்தின் 29 ம் பிரிவுபடி தெளிவாக விளக்கப்பட்ட பாரதூரமான இடர்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கிருர்கள்.

காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகா எமக்கு அளித்த வாக்குறுதியைநிறைவேற்ற இப்போதுள்ள அரசாங்கம் தவறிவிட்டது. ஆங்கில மொழியையே நம்பி சேவையில் சேர்ந்தவர்கள் (பழைய சேவையில் சேர்ந்தவர்கள்) தொடர்ந்து ஆங்கில மொழியிலேயே தங்களது கடமைகளைப் புரியலாம் என்று காலஞ்சென்ற பிரதமர் வாக்குறுதி அளித்திருந்தார். 1956ம் ஆண்டில் பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா கூறியதற்கும், அவர் வழியைக் கடைப்பிடிக்கும் இந்த அரசாங்கத்தின் செயலுக்கும் முரண்பாடுகள் அதிகமிருக்கிற.

தமிழ்ப் பேசும் அரசாங்க ஊழியர்களின் தற்போதைய நிலைமையை நன்குணர்ந்து, எமது கோரிக்கையை அரசாங்கம் ஒட்புக்கொள்ளச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்ளோம்."

# 'வடக்குக் கிழக்கு மாகாணத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாக நம்பப்படுகிறது. தமிழரசுக்கட்சியினர் இம்மாதம் நடத்தவிருக்கும் நேரடிநடவடிக்கை பற்றியும் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தெரிவித்த வட்டமேசை மகாநாடு பற்றிய கருத்தும் ஆலோசிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

### பிரதமர் உறுதி

தமிழ்ப்பேசும் மக்கள் பிரச்னைகள் பற்றி கவனமாகக் கேட்ட பிரதமர் அவைகளைத் தவிர்க்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மகாநாட்டில் ஆராயப்பட்ட சில பிரச்னைகள் வருமாறு:

முக்கியமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதி மன்றம் நிர்வாகம் பற்றியது. விசாரணைகள், புகார்கள் எல்லாம் தமிழில் இருக்கவேண்டுமென்பதும் குறிப்பிடப்பட்டது.

கொழும்புத் தமிழர்கள் தமது தாய்மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்வது.

தமிழ் அல்லாத மற்ற மொழி பேசும் மற்றவர்களுக்கு கஷ்டம் விளைவிககாத வகையில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தைதமிழில் நடத்துவது.

பெயர்ப் பலகைகள் தமிழிலேயும் இடம்பெறச் செய்வது. இலங்கை எங்கிலும் உள்ள பலகைகளும் தமிழிலும் எழுதச் செய்வது. குறிப்பாக இந்த ஏற்பாட்டை உடனடியாகச் செய்விப்பதற்கு உறுதியளித்திருப்பதாக பிரதமர் உறுதியளித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

கார்ப்ரேஷன்கள்வெளியிடும் பத்திரங்கள் எல்லாவற்றிலும் தமிழ் இருக்கவேண்டுமென்பது.

சில கார்ப்பரேஷன்களின் பத்திரங்கள் வெளியிடப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. பார்லிமெண்ட் சட்ட விதிகள், மசோதாக்கள், அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்படும் அறிக்கைகளும் தமிழில் வெளியிடுவது.

மகாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் எல்லாம் மொழிச்சட்டத்துக்கு உட்பட்டதாகவும், நியாமான அளவு தமிழ் உபயோகச் சட்டத்திற்கு உட்பட்டதாகவும் தான் இருக்குமெனத் தெரியவருகிறது. இது முதலாவது கட்டமாகவும் இருக்கும். பின்னர் பெரிய சிக்கலான பிரச்னைகள் பற்றிப் பேசப்படும்.

### வவனியா எம். பி. அழைக்கப்படுவார்?

இது சம்பந்தமாக மற்ளுெரு மகாநாடு இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது. வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரமும் மகாநாட்டுக்கு அழைக்கப்படலாமென மகாநாட்டு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### எம். பி.யின் மறுப்பு

இம்மகாநாட்டில் தமிழரசுக் கட்சியின் நேரடிநடவடிக்கை வட்டமேசை மகாநாடு என்பன பற்றிப் பேசப்படவில்லை என்று யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா மறுத்தார். மகாநாட்டில் ஆராயப்பட்ட விஷயங்களைப் பற்றி வெளியிடுவதற்கு மறுத்த அவர், தாம் பிரதமருடன் நடத்தும் அடுத்த கூட்டத்தைத் தொடர்ந்து முடிவுகள் வெளியிடப்படுமெனவும் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆனந்தனுக்கு கொழும்பில் வரவேற்பு

கொழும்பு, சனி

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல்வீரர் ஆனந்தனுக்கு இம்மாத இறுதியில் கொழும்பில் பிரமாதமான வரவேற்பளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. பல சங்கங்கள் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

நாவலப்பிட்டியிலும் ஆனந்தனுக்கு வரவேற்பளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

# விஞ்ஞானியும் வேதகுருவும்..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யை மண்ணில் புதைத்து தண்ணீர் ஊற்றினுல் பிராணவாயுவும், கரியமிலவாயுவும், இலவணவாயுவும் சேர்ந்து மரம் முளைக்கிறதென்று மொட்டையாகக் கூறிவிட்டுப் போகும் வெறும் விஞ்ஞானி. கல்லினுட் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் சத்துக்கொடுப்பது இயற்கை—அதில் மர்மம் ஒன்றுமில்லையே என்று கூறுபவர். இப்படிப்பட்டவர் வானவெளியை ஒருகாலும் மனிதன் வெல்ல முடியாது என்று கூறுவாராகில் அவர் ஒரு பேருண்மையைக் கண்டு பிடித்துவிட்டார் என்று தானே கொள்ளவேண்டும். மனித வல்லமைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இயங்குகிறதென்று அவர் மறைமுகமாக ஒப்புக்கொண்டுவிட்டாரல்லவா?

இவருக்குப் பல வருடங்களுக்கு முன்பு தாயுமானவர் என்று ஒரு 'விஞ்ஞானி' இருந்தார். அவரும் இந்த உண்மையைக் கண்டுபிடித்துவிட்டு,

'தண்ணருள் வெளிக்குளே<br>
அகிலாண்ட கோடியெல்லாம்<br>
தங்கும் படிக் கிச்சை வைத்<br>
துயிர்க்குயிராய்த்<br>
தழைத்ததெது?'

என்று அவர் கேட்டார். தனது அருள் வெளிக்குள்ளே கோடி கோடி அண்டங்கள் எல்லாவற்றையும் நிலைத்திருக்கும்படி திருவுள்ளம் கொண்ட ஒரு பொருளைப்பற்றி அவர் பாடினுர். இவருக்கு முன் வாழ்ந்த அருணகிரிநாதர் என்ற 'விஞ்ஞானி' 'சகலபுவனமும் நிலைபெற நிறுவிய' என்ற பாடினுர். அவருக்கும் முன்பு வாழ்ந்த மாணிக்க வாசகர் என்பார் 'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி' என்று வாழ்த்தினுர். இவருக்கும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் அண்டங்கள் 1008 இருப்பதாகக் கூறினுர்கள்.

செவ்வாய், வியாழன் முதலிய கிரகங்களையும் 27 நட்சத்திரங்களையும் கொணடது ஓர் அண்டம் என்றும் அதற்கப்பாற்பட்டது பகிரண்டம் அல்லது வெளி அண்டங்கள் என்றும் நமது முன்ளுேர் கூறினுர்கள். இன்றைய விஞ்ஞானிகளும் இதை ஏற்றுக் கொள்ளுகிருர்கள். நாம் வசிக்கும் பூமி சூரிய மண்டலத்தைச் சேர்ந்தது. சூரியன் ஒரு நட்சத்திரம். சூரியனைப் போல பத்தாயிரம் கோடி நட்சத்திரங்கள் கொண்டதாம் 'மில்கிவே' என்ற நாம் வாழும் அண்டம். அதைப்போல இன்னும் 2000 அண்டங்கள் வானவெளியில் பரந்து கிடக்கின்றன! தலை சுற்றுகிறதல்லவா? இன்னும் கொஞ்சம் பார்ப்போம்.

எமது பூமி ஒரு புள்ளி அளவானதென்றுவைத்துக்கொண்டால், பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயுள்ள தூரம் 19 8/1 அடி. பூமிக்கும் அருகிலுள்ள நட்சத்திரத்துக்கும் சுமார் 1,005 மைல். 'மில்கிவே'யின் குறுக்களவு சுமார் 23,380,000 மைல். எமக்கு மிகவும் அண்மையிலுள்ள மற்ற அண்டம் 467,600,000 மைல்களுக்கப் பாலிருக்கிறது!!

ஆதர்கிளாக் வானவெளியை மனிதன் வெல்ல முடியாதென்று கூறியதில் ஆச்சரியம் இல்லையல்லவா? இந்த மண்டலங்களும், நட்சத்திரங்களும் அண்டங்களும் கண்டபடி தாறுமாருகப் பறந்து திரியாமல் ஓர் ஒழுங்கு முறைப்படி நிதானமாகச் சுழன்று வருகின்றன. இவற்றை இவ்வளவு கேர்த்தியாக இயக்கும் சக்தி எப்பேர்ப்பட்டதாயிருக்க வேண்டும்? இவ்விடத்தில் தான் ஆங்கில பிஷப் ஒருவர் சென்ற வாரம் கூறியதும் ஞாபகத்துக்கு வருகிறது. 'மேலே எங்கேயோ ஒரு பிரகிருதி இருப்பதாக நினைக்கப் படாது. எல்லாம் எமக்குள்ளேதானிருக்கிறது' என்று அவர் கண்டு பிடித்த உண்மை பெரிய வாக்குவாதங்களைக் கிளப்பி விட்டதாம்.

விஞ்ஞானி வேத குருவாக மாறி விட்டாரா அல்லது வேத குரு விஞ்ஞானியாக மாறி விட்டாரா? எது உண்மை?

பரம்பொருளின் தன்மையே இப்படித்தான்! மனிதனுடைய சிந்தனைக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டது. எவ்வளவுக்கெவ்வளவு அதைப்பற்றி ஆராய்கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு மர்மம் விரிந்து கொண்டே போகும். மர்மம் இல்லாவிட்டால் அது பரம் பொருள் ஆகுமா?


## புத்தாண்டின் புனித விருந்து!

மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்



★ சந்திரபாபு,
★ எப். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி.எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி. டி. ராஜகாந்தம்
★ கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

# குமார ராஜா

திரைச்சதை—வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.

இசை டி. ஆர் பாப்பா

டைரக்ஷன் ஜி கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி. ஹெலன்

பின்னணி வி என். சுந்தரம், பி. லீலா, ஜமுனுராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் சாவித்திரி

மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

# கப்பலோட்டிய தமிழன்

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி — ஜெமினி — சாவித்திரி—சரோஜாதேவி நடித்த

பார்த்தால் பசிதீரும்

தமிழ்பேசும் படம்.



2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி

ஒடியன் (கல்கிசை)
2-15, 6, 9-30 மணி

ஒடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி

ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி

ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த



# ஆடிப் பெருக்கு

டைரக்ஷன்: கே. சங்கர்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.